விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 29 வியாழக்கிழமை (13.01.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 025

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## விடாது பெய்யும் மழையால்

# பேரழிவு ஏற்படும் அபாயம்!

# இதுவரை 10 லட்சம் மக்கள் பாதிப்பு

(மட்டக்களப்பு)

நாட்டில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் பேரழிவு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது. இந்த இயற்கை அனர்த்தத்தால் இதுவரை 10 லட்சம் மக்கள் பாதிப்படைந்துள்ளனர். (16ஆம் பக்கம் பார்க்க)



## இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து

# த.தே.கூட்டமைப்பு-த.க.அரங்கம் உப குழுவினர் நேற்று கூடி ஆராய்வு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் குறித்து ஆராய்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்க் கட்சிகளின் அரங்கமும் நியமித்த உபகுழுவின் முதலாவது கூட்டம் நேற்று நடைபெற்றது.

பம்பலப்பிட்டியிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தின் சார்பில் த.சித்தார்த்தன், எம்.கே.சிவாஜிலிங்கம், அ.இராசமாணிக்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இனப்பிரச்சினைக்கு பொதுவான தீர்வு யோசனை தயாரிப்பது தொடர்பாக இக் கூட்டத்தில் பேசப்பட்டதாக தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் (16ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் 898.4 மி.மீ மழை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வருடாந்த மழைவீழ்ச்சியில் கடந்த 11 நாட்களில் மாத்திரம் 898.4 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மட்டக்களப்பு வானிலை அவதான (16ஆம் பக்கம் பார்க்க)

வர்ணக் கலண்டர்



நாளைய வலம்புரியுடன் வர்ணக் கலண்டர் வெளிவருகிறது. உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

## கிணற்றில் ஆணின் சடலம் உரும்பிராயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் யோகபுரம் பகுதியில் வளவு ஒன்றின் கிணற்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மாலை 4 மணியளவில் கோப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் வழங்கிய தகவலை அடுத்து கிராமசேவையாளரால் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டு யாழ்.நீதவான் நீதிமன்றின் நீதிபதி அ.ஆனந்தராஜா முன்னிலையில் சடலம் கிணற்றி (16ஆம் பக்கம் பார்க்க)

## புங்குடுதீவில் வாகன விபத்து ஒருவர் பலி; மூவர் படுகாயம்

### நயினாதீவுக்குச் சென்ற வேளை பரிதாபம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மகா வித்தியாலயத்திற்கு அண்மையாக நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலியானதுடன் மூவர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் நயினாதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பாலசிங்கம் ஜெகதீபன் (வயது 34) என்பவரே உயிரிழந்தவராவார்.

அத்துடன் இவ்விபத்தில் நயினாதீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குருநாதர் தில்லையம்பலம் (வயது 79) என்ற முதியவரின் இடதுகை துண்டாடப்பட்ட (16ஆம் பக்கம் பார்க்க)

NIBM BUILDING COMPETENCIES Jaffna யாழ்ப்பாணம்

A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development


Certificate in Computer Science @ NIBM

021 222 0360/61/62

National Institute Of Business Management
No 40 College Road (opposite to Jaffna hindu play ground)
jaffna.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜனாதிபதியின் கிழக்கு விஜயம் கைவிடப்பட்டது



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் சீரற்ற காலநிலை காரணமாக கைவிடப்பட்டது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுவதற்காகவும், நிவாரண விநியோகங்களை ஆரம்பிப்பதற்காகவும் பொலனறுவை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு நேற்றுக் காலை விஜயம் செய்ய ஜனாதிபதி திட்டமிட்டிருந்தார்.

பொலனறுவைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து மெதிரிகிரிய லங்காபுர மகா வித்தியாலயத்தில் தங்கியுள்ள 3ஆயிரம் மக்களை பார்வையிட்டு நிவாரணங்களையும் வழங்கினார்.

எனினும் சீரற்ற காலநிலை காரணமாக பொலனறுவைக்கு அப்பால் அவர் செல்ல முடியாமல் கொழும்புக்குத் திரும்பினார்.

இதேவேளை சுற்றுநிருபங்களுக்குள் கட்டுப்பட்டிருக்காமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சகல உதவிகளையும் வழங்குப்படி ஜனாதிபதி அதிகாரிகளை பணித்துள்ளார். (ந-5)

# காங்கேசன்துறைமுகம் புனரமைப்பு புதுடில்லியில் உடன்பாடு கைச்சாத்து

(புதுடில்லி)

காங்கேசன்துறைத் துறைமுகத்தை புனரமைப்பது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு விரிவான அறிக்கையை தயாரிப்பது தொடர்பான உடன்பாடு நேற்று முன்தினம் புதுடில்லியில் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

காங்கேசன்துறைத் துறைமுகத்தை புனரமைத்துக் கொடுப்பதற்கு இந்தியா உதவ முன்வந்துள்ள நிலையில் முதற்கட்டமாக விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கு RITES என்ற நிறுவனத்துடன் நேற்று முன்தினம் உடன்பாடு ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான உடன்பாட்டில் இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளர் திருமூர்த்தியும் RITES நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் அரவிந்தகுமாரும் கையெழுத்திட்டுள்ளனர்.

காங்கேசன்துறை துறைமுகத்தைப் புனரமைப்பதற்கான தொழில்நுட்ப ஆய்வுகளை மேற்கொண்டு இந்நிறுவனம் விரிவான அறிக்கை ஒன்றைக் கையளிக்கும் என இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தொழில்நுட்ப ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்புக்காக இந்திய அரசாங்கம் 70மில்லியன் ரூபாயை செலவிடவுள்ளது.

காங்கேசன்துறை துறைமுகப் புனரமைப்பு, ஆழமாக்கல், புதிய இறங்கு துறை கட்டுமானம், வசதிகளை கட்டமைத்தல் மற்றும் கடல்சார் உதவிகளை அடிப்படையாகக் கொண்டு இத்திட்ட அறிக்கை தயாரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை துறைமுகத்தின் நீரியல் சார் ஆய்வுகள் கடந்த ஜூலை மாதம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இத் துறைமுகப் பகுதியில் காணப்படும் கப்பல்களின் சிதைவுகளை அகற்றும் பணிகள் இன்னும் சில மாதங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் நிறைவடைந்த பின்னர் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலாக தொடர்புகள் மேலும் வலுவடையும் என இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# திறந்த பல்கலைக்கழகம் பரீட்சை பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் சட்ட மாணி கற்கைநெறி 2011/2012 ஆம் கல்வியாண்டிற்கான தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 16.01.2011 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 - 12.00 மணிவரை நடைபெறவிருந்த போதிலும் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது.

இப்பரீட்சையானது எதிர்வரும் 13.02. 2011 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளதாக இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ந)

# வகுப்புக்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்றம் கலைத்தூது அழகியற் கல்லூரியில் எதிர்வரும் பொங்கல் தினத்துடன் தரமான ஆசிரியர்களின் வழிகாட்டல்களின் கீழ் புதிய ஆண்டிற்கான நடனம், சங்கீதம், மிருதங்கம், வயலின் உட்பட மேலைத்தேயக்கலைகளான ஓர்கன், ஒக்ரபாட், கிற்றார், பியானோ மற்றும் கண்டியநடனம், அழகியற் கலைகள், வளர்ந்தோருக்கான ஆங்கிலம் ஆகிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

புதிய மற்றும் பழைய மாணவர்கள் இவ் வகுப்புகளில் இணைந்து கொள்ளலாம் என அதிபர் திருமதி பி.எவ்.சின்னத்துரை அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# உள்ளூராட்சித் தேர்தலில் 'வீடு' சின்னத்தில் போட்டி

## தமிழரசுக் கட்சி கூட்டத்தில் முடிவு

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்டக் கிளைக் கூட்டம் இல.30, மாட்டின் வீதியிலுள்ள கட்சியின் தலைமைப் பணிமனையில் யாழ்ப்பாணம் மாவட்ட கிளைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நேற்று நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கட்சியின் அனைத்துத் தொகுதிக் கிளைப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுவது பற்றியும், வேட்பாளர் தெரிவு பற்றியும் தற்போதைய அரசியல் கள நிலை பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் இலங்கை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களை நிறுத்துவது என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் "வீடு" சின்னத்தில் இத்தேர்தலில் போட்டியிட முன்வருமாறும் அதற்கான விண்ணப்பங்களை அந்தந்த தொகுதிக் கிளைகளுக்கு ஊடக தமிழரசுக் கட்சியின் தலைமைப் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறும் தமிழரசுக் கட்சியின் அங்கத்தவர்களை கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்காக மாவட்டக் கிளைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா மற்றும் சி.சிறிதரன் ஆகியோருடன் பேராசிரியர் க.குகபாலன், சீ.வீ.கே.சிவஞானம், குலநாயகம், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆகியோரைக் கொண்ட வேட்பாளர் தெரிவுக் குழு நியமிக்கப்பட்டது என தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் சூ.சே.குலநாயகம் தெரிவித்தார். (ந)

# கிளிநொச்சி மாவட்டமும் வெள்ளத்தில் மிதக்கின்றது

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு


கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டம் மழை வெள்ளத்தில் மிதக்கின்றது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் உருத்திரபுரம் வடக்கு, சக்திபுரம் மக்களை நேரில் சென்று பார்வையிட்ட பின்னரே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சியாக பெய்துவரும் மழையின் காரணமாக அப்பகுதியிலுள்ள குளங்கள் அனைத்தும் உடைப்பெடுத்து மக்களின் வாழ்விடங்களை முற்றுகை இட்டுள்ளது.

இதன் காரணமாக மக்கள் இருப்பிடங்களின்றி மிகவும் துன்பகரமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.



பாடசாலைகள், பொது இடங்கள் என அனைத்து இடங்களும் இயற்கையின் பிடியில் வசமாகிவிட்டதன் காரணமாக மக்கள் எங்கு செல்வதென்று தெரியாமல் அல்லல்படுகின்றனர்.

இதே வேளை முரசு மோட்டை, கண்டாவளை, பெரியகுளம், புளியம் பொக்கணை ஆகிய பகுதிகளும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இரணைமடுக் குளத்தில் அனைத்து வான் கதவுகளும் திறக்கப்பட்ட நிலையில் கனகராயன் ஆற்றுப் படுக்கையிலுள்ள நெல் வயல் கிராமங்கள் பாரிய அளவு சேதங்களை எதிர் கொண்டுள்ளன.

எனவே இம்மக்களின் பரிதாபகர நிலையறிந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபாவதி கேதீஸ்வரனுடன் நேற்றய தினம் கலந்துரையாடிய போது அவர் இது தொடர்பில் தமக்கு எதுவித தகவல்களும் வழங்கப்படவில்லை. உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகள் எடுப்பதாகவும் உறுதியளித்தார் என தெரிவித்துள்ளார். (ந-7)

# புதிய அதிபர் நியமனம்

(யாழ்ப்பாணம்)



யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக திருமதி சிறிதரன் பாலராணி அவர்கள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டு 10.01.2011 (திங்கள்) தொடக்கம் தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பிரதி அதிபராக கடமை புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)


3 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 10 07 1968

மறைவு 18 12 2007



அமரர்

இராசலிங்கம் லிங்கேஸ்வரன்

அன்பான அப்பாவே ஆதரவாய் இருந்தீர்கள்,
ஆண்டும் மூன்றாகி விட்டதே, அப்பா எமக்கில்லை.
ஆவலுடன் தேடுகிறோம்-நெஞ்சம் கனக்கிறதே;
எங்கப்பா உள்ளீர்கள்? உங்களின் ஆத்ம சாந்திக்காக
இறைவனிடம் இறைஞ்சுகிறோம்.

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு.

உங்கள் நினைவுடனே,
மனைவி-றஜிதா,
பிள்ளைகள்-டிலக்ஷன், டிவாகர், திலக்ஷனா

(3518)

விற்பனைக்கு

சாலி மோட்டார் சைக்கிள் (இல.500-9451), லேடிஸ் சைக்கிள் மற்றும் வாகனங்களுக்குரிய ரயர்கள் விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் நேரம்:- 3-5மணி

விஜயகுமார்,
217/3, கடைச்சாமிலேன்,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(3520)




வீடு வாடகைக்கு உண்டு

கொடிகாமம் வீதி,
புலோலி தெற்கு,
புலோலி, மந்திகை.
தொடர்பு:-
0217911968
0771349125

(சி-2145)

# இன்று ஒரு தகவல்

## மனம்

மனம் இருக்கிறதே அதற்கு உதாரணமாக எதை சொல்வார்க்ள் தெரியுமா? குரங்கைத்தான் சொல்வார்கள். குரங்கு மரத்தில் ஒரே இடத்திலா உட்கார்ந்திருக்கிறது? ஒவ்வொரு கிளையாக தாவித்தாவிப் போய்க்கொண்டே இருக்கிறது.

அதனால்தான் மனம் ஒரு குரங்கு என்று சொல்கிறார்கள். ''இந்த மனதை அலையவிடாமல் அதை ஒருநிலைப்படுத்து'' என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். அவர்களுக்கென்ன சுலபமாகச் சொல்லி விடுகிறார்கள். நமக்கல்லவா அதன் அவஸ்தை புரிகிறது.

மனதை ஒரு நிலைப்படுத்துவது மிகவும் கஷ்டம் என்று பலபேர் நினைக்கின்றோம். அது எல்லோராலும் முடிகிற காரியம் தானாம். வேண்டுமானால் ஒரு பரிசோதனை செய்து பாருங்கள் என்கிறார் ஒரு பெரியவர்.

வேறொன்றுமில்லை. ஒரு சாதாரண ஆளிடம் நிறைய சில்லறைக்காசுகளை கொடுத்து எண்ணச் சொல்லுங்கள் . அவன் எவ்வளவுதான் எண்ணினாலும் எண்ணிக் கையை தவறவிட்டுவிட்டு முழிப்பான். மறுபடியும் முதலிலிருந்து ஆரம்பிப்பான்.

அதே ஆளிடம் 100 ரூபா நோட்டுகளை கொடுத்து எண்ணச்சொல்லுங்கள் . இப்ப அந்த ஆள் கொஞ்சம் நிதானமாக, கவனமாக எண்ண ஆரம்பிப்பான்

இது ஏன்?

ஒருநோட்டை விட்டுவிட்டாலும் 100 ரூபா போய்விட்டது. முதலில் அப்படியில்லை.

5 ரூபாய் போனாலும் 10ரூபாய் போனாலும் பெரிதாக தோன்றுவதில்லை.

இந்த உலகத்தில் எதுவும் பெரிதில்லை. இதைவிட பெரிதாக உள்ளது ஒன்று இருக்கிறது. அதற்கு விலை மதிப்பில்லை என்ற எண்ணம் வந்துவிட்டால் மனதை ஒருநிலைப்படுத்துவது கஷ்டமாக இருக்காது என்கிறார் அந்தப் பெரியவர்.

மனதை ஒரு நிலைப்படுத்திவிட்டால் வெற்றி நெருங்கி வந்து விட்டது என்று அர்த்தம். துரியோதனன், அர்ச்சுனன் இவர்கள். இருவருக்குமே குரு துரோணர்தான். இவர்கள் இருவருக்கும் அவர்தான் வில்வித்தை கற்றுக் கொடுத்தார்.

கற்றுக் கொடுத்ததைப் பொறுத்த வரைக்கும் எந்த வித்தியாசமுமில்லை. இருவருக்கும் ஒரேமாதிரித்தார் கற்றுக் கொடுத்தார். ஆனால் அர்ஜுனன் தான் கெட்டிக் காரனாக வந்தான். ஏன்? அங்கேதான் விஷயமிருக் கிறது.

ஒருநாள் துரியோதனையும் அர்ஜுனனையும் பரிசோதித்துப் பார்த்தார் துரோணர். எந்த அளவுக்கு இவர்கள் கற்றிருக்கிறார்கள் என்று பார்ப்பதற்காக இருவரையும் காட்டுக்கு அழைத்துக் கொண்டு போனார்.

ஓரிடத்தில் நிறுத்தினார். முதலில் துரியோதனனைக் கூப்பிட்டார். அதோ தெரிகிறது பார் மரம் அந்த மரத்தின் வலது பக்கத்தில் நீளமாக இருக்கும் ஒரு கிளைமீது கிளி இருக்கிறது. அதன் வலதுகண்ணுக்கு நீ குறிவைக்க வேண்டும்

எங்கே செய் பார்க்கலாம் என்றார். துரியோதனன் அதே மாதிரி செய்தான்.

''இப்பொழுது உனக்கு என்ன தெரிகிறது?'' என்று கேட்டார் துரோணர். அவன் அதற்கு,

''மரம் தெரிகிறது. அந்த மரத்தின் கிளை தெரிகிறது. அதன்மேல் உட்கார்ந்திருக்கும் கிளி தெரிகிறது. அந்தக் கிளியின் தலை தெரிகிறது. கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் நீங்கள் குறிவைக்கச் சொன்ன அந்த வலது கண்ணும் தெரிகிறது என்றான். 'சரி நீ போகலாம்' என்றார். அடுத்ததாக அர்ச்சுனனைக் கூப்பிட்டார். அதே மாதிரிக் குறிவைக்கச் சொன்னார். அவனும் அதேபோல் செய்தான். இப்பொழுது உனக்கு என்ன தெரிகிறது? என்று கேட்டார் துரோணர். கிளியின் வலது கண்ணைத் தவிர வேறெதுவும் எனக்குத் தெரியவில்லையே என்றான் அர்ஜுனன்.

அர்ஜுனனுக்கு நிகராக துரியோதனன் வரவே முடியாதென்பதை அப்பொழுதே முடிவு செய்து விட்டாராம் துரோணர். அதனால் மனம் எந்தளவுக்கு ஒருநிலைப் படுகிறதோ அதுதான் வெற்றியின் இரகசியம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நாடளாவிய ரீதியில் 9300 பாடசாலைகளில் வாழ்க்கைத் திறனுக்கான ஆங்கிலப்பாடநெறி

## இவ்வருடம் முதல் அமுல்

(கொழும்பு)

ஜனாதிபதியின் விசேட செயற்திட்டமான வாழ்க்கைத் திறனுக்கான ஆங்கிலம் நாடளாவிய ரீதியில் 9 ஆயிரத்து 300 பாடசாலைகளில் இவ்வருடம் முதல் அமுலுக்கு கொண்டுவரப் படவுள்ளது.

இத்திட்டத்திற்கென அரசாங்கம் 750 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதுடன் ஒன்பது மாகாணங்களை உள்ளடக்கும் வகையில் 34 செயற்றிட்டங்கள் இதற்கென தயாரிக்கப்பட்டுள்ளன.

இதற்கான முழுமையான செயற்றிட்டத்தை தயாரிக்கும் நிகழ்வு ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவின் தலைமையில் மீபேயிலுள்ள கல்வித் தலைமைத்துவ வளர்ச்சி நிலையத்தில் நடைபெற்றது.

கல்வியமைச்சின் செயலாளர் எச்.எம். குணசேகர உட்பட முக்கியஸ்தர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இதற்கான கருத்தரங்கொன்று இரு நாள் நிகழ்வாக இடம் பெறுவதுடன் ஜனாதிபதி செயலணியின் ஆலோசகர் சமிந்த வீரக்கொடி இதனை ஒழுங்கு செய்திருந்தார்.

ஒன்பது மாகாணங்களையும் பிரதி நிதித்துவப் படுத்தும் கல்வியதிகாரிகள் 65 பேரின் பங்கேற்புடன் மேற்படி செயற்றிட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது.

கிரமப்புற பாடசாலை கள் உட்பட நாட்டின் சகல பாடசாலை மாணவர்களும் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெறும் வகையில் இத் தேசிய திட்டம் நடைமுறைப் படுத்தப் படுகின்றது. (ஸ்ரீ-2)

# உயர் தொழில்நுட்பவியல் நிறுவன அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் 2002 ஆம் ஆண்டிற்கு முன்னர் கல்விகற்று எச்என்டிஏ, எச்என்டிசி, எச்என்டிஎம், ஆகிய கற்கை நெறிகளை பூர்த்தி செய்யாத மாணவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது.

எனவே மாணவர்கள் இவ் இறுதிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன் பதிவாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து வழங்குமாறு பதிவாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# ஸ்ரீ அம்மா பகவான் பூஜை நிகழ்வு

ஸ்ரீ அம்மா பகவான் சம்பூர்ண ஆரோக்கியத்துக்கான பூஜை நிகழ்வு எதிர்வரும் பொங்கல் தினத்தன்று சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீஅம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் நடை பெறவுள்ளது.

தீராத நோய்களினால் அவஸ்தைப்படும் மக்கள் கலந்து கொண்டு ஸ்ரீ அம்மா பகவானின் அருள் ஆசியினை பெற்றுக் கொள்ளுமாறு பிரார்த்தனை மையத்தினர் அழைக்கின்றனர். (ஸ்ரீ-3)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 100 | 160 | 150 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 220 | 240 | 250 | 250 |
| தக்காளி | 60 | 80 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 50 | 40 |
| கோவா | 60 | 80 | 100 | 80 |
| கரட் | 70 | 100 | 120 | 90 |
| பூசணி | 25 | 50 | 40 | 40 |
| புடோல் | 50 | 100 | 100 | 100 |
| வாழைக்காய் | 30 | 50 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 200 | 260 | 280 | 250 |
| பெரிய வெங்காயம் | 130 | 150 | 150 | 170 |
| பாகற்காய் | 80 | 160 | 200 | 190 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 100 | 60 |
| கருணைக் கிழங்கு | - | 50 | 60 | 50 |
| பயற்றங்காய் | 200 | 230 | 200 | 200 |
| லீக்ஸ் | 70 | 130 | 140 | 120 |
| பீற்றூட் | - | 150 | - | - |
| கறிமிளகாய் | - | 250 | 250 | 250 |
| முருங்கைக்காய் | - | - | - | - |
| போஞ்சி | 130 | 140 | 160 | 150 |
| கத்தரிதம்புள்ள | - | 80 | 150 | 120 |
| கீரை - 1 பிடி | 20 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 40 | 80 | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 40 | 50 | 45 |

# இராசி பலன்

13.01.2011
(மார்கழி 29, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு
நவமி பின்னிரவு 5.39 மணிவரை
அச்சுவினி முன்னிரவு 9.46 மணி வரை
இராகுகாலம் 2.03-3.33 மணிவரை
சுபநேரம் 08.03-9.33 மணிவரை
அமிர்தசித்தம்

**மேடம்** தெய்வ வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், ஆதாயத்தை எதிர்பார்க்காமல் செய்த வேலை ஒன்றில் கணிசமான இலாபம் கிடைக்கலாம், பணியில் சிறுமன உளைச்சல் ஏற்படலாம்.

**இடபம்** பயணத்தால் பலன் கிடைக்கும், நண்பர்களின் சந்திப்பால் திடீர் விரயம் ஏற்படலாம், சயனசுகக் குறைவுண்டு, தொழிலில் சிறு மாற்றங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** பிறர் பாராட்டும் வகையில் நடந்து கொள்வீர்கள், தொழிலில் நல்ல வருமானத்தை எதிர்பார்க்கலாம், உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள்.

**கடகம்** தொட்ட காரியம் வெற்றி பெறும், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், ஆரோக்கியமான நாள்.

**சிங்கம்** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், முன்கோபமும் அலைச்சலும் அகலும், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரயாண நன்மையுண்டு.

**கன்னி** எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை எடுக்க ஆட்படலாம், பயணங்களின்போது பொருட்களில் கவனம் அவசியம், பணப்பற்றாக்குறையுண்டு.

**துலாம்** சுற்றத்தாரின் வருகையுண்டு, தொகை எதிர்பார்த்தபடியே கிடைக்கலாம், வெளியூர் பயணத்தால் சிறு ஆதாயம் கிடைக்கலாம், செல்வாக்கான நாள்.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பொருள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புகழ் அதிகரிக்கும், திருமண முயற்சி வெற்றி பெறும்.

**தனுசு** வியாபார விருத்தி ஏற்படலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும், பொதுத் தொண்டுகளில் ஆர்வம் கூடும், பொருட் சேர்க்கையுண்டு.

**மகரம்** அதிர்ஷ்ட செய்திகள் வந்து சேரும், பெற்றோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், பிறருக்காக எடுத்த முயற்சி வெற்றியளிக்கும்.

**கும்பம்** உடன் பிறப்புக்கள் உதவிக் கரம் நீட்டுவர், குடும்பப் பொறுப்புக்கள் கூடும், தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், தடைப் பட்ட காரியம் கைகூடும்.

**மீனம்** பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுபவீர்கள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

வளவன்




வல்வெட்டித்துறை வல்வை ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வல்வெட்டித்துறை பார்வதி இலவச ஆங்கிலக் கல்வி நிலையத்தில் அண்மையில் இடம்பெற்ற இரத்ததான முகாமில் வைத்தியர் குருதிக் கொடையாளி ஒருவரை பரிசோதிப்பதையும் இரத்ததானம் வழங்குவோர்களையும் படங்களில் காணலாம்.
( படங்கள்:-வல்வெட்டித்துறை செய்தியாளர்)

## வாழ்வாதார உதவிபெற்ற பயனாளிகளின் மதிப்பீடு

(கொழும்புத்துறை)

வன்னியில் இருந்து மீளக்குடியேறிய மக்களின் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்ட 80 பயனாளிகளை மதிப்பீடு செய்வதற்கான கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் திட்ட முகாமையாளர் க.எழில்முதல்வன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-51)

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்காக அவசர கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

## தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கான சம்பளம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நிரந்தரமாக கடமையாற்றி தற்காலிகமாக யாழ்.மாவட்டக் கல்வி வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் மார்கழி மாத வேதனப்பட்டியல் யாழ்.கல்விவலய நிதிக் கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஆசிரியர்கள் யாழ். கல்வி வலயத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் வேதனப் பட்டியலில் ஒப்பமிடுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஸ்ரீ)

# யாழ். பருத்தித்துறை வீதி அகலிப்பு நடவடிக்கைகள் துரித கதியில்

(அல்வாய்)

யாழ். பருத்தித்துறை வீதி அகலிப்பு வேலைகளில் ஈடுபட்ட தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்கு சமுகமளித்துள்ளார்கள்.

அவர்கள் தற்போது சாரையடிக்கும் புலோலி அறிஞர் கந்த முருகேசனார் சிலையடிக்கும் இடையில் உள்ள வீதியை புனரமைப்பு செய்து வருகின்றனர்.

மேலும் ஒரு தொகுதி தொழிலாளர்கள் ஓராங்கட்டைச் சந்தியிலிருந்து பருத்தித்துறை நோக்கிய வீதியை புனரமைப்பு செய்து வருகின்றார்கள். (ஸ்ரீ-3-19)

# யோசவ்வாஸ் அடிகளாரின் நினைவு தின வழிபாடு

(கொழும்புத்துறை)

முத்திப்பேறு பெற்ற யோசவ்வாஸ் அடிகளின் 300ஆவது வருடநிறைவை யாழ். மறைமாவட்ட திருச்சபை கொண்டாடுகின்றது.

அந்தவகையில் மறைபரப்பு பணிக்காக யாழ்ப்பாணம் கொழுத்துத்துறையில் வந்திறங்கிய யோசவ்வாஸ் அடிகளாரை நினைவு கூரும் விசேட வழிபாடுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

குறிப்பாக மறைபரப்பில் சவால்களை எதிர்கொண்ட காலத்தில் முத்திப்பேறு பெற்ற யோசவ்வாஸ் அடிகள் கொழும்புத்துறை பகுதிகளில் பிச்சைக்காரன் வேடத்தில் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-51)

# மாகாண மட்ட கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் தெரிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தரம் 6,7 மாணவர்களுக்கான மாகாண மட்ட கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இம்முறை இப்பரீட்சைக்கு 2010 இல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 171 புள்ளிகளும் அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களும் மற்றும் 2010 இல் மாகாணமட்ட கணித ,விஞ்ஞான ஒலிம்பியாட் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களும் (தற்போது தரம் 7 இல் கற்பவர்கள்) தோற்ற முடியும்.

தரம் 6 இல் கற்பவர்களுக்கான அனுமதி அட்டைகள் அவர்கள் தரம் 5 இல் கற்ற பாடசாலைக்கும் தரம் 7 இல் கற்ற மாணவர்களின் அனுமதி அட்டைகள் அவர்கள் தற்போது கற்கும் பாடசாலைக்கும் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் யாழ். வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவில் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ)

# தைப்பூச நாள் நிகழ்வுகள்

(சாவகச்சேரி)

தைப்பூச நாள் நிகழ்வுகள் மீசாலை வேம்பிராய் சத்திய ஞானக் கோட்டத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வை முன்னிட்டு சத்திய ஞானக்கோட்டத்தில் அமைக்கப்பட்ட கொடிக் கம்பத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு உலக பொதுக்கொடி ஏற்றப்படும்.அதனைத்தொடர்ந்து காலை 10 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை மகா மந்திர நினைவு நடைபெறவுள்ளது.

அதில் கலந்துகொள்பவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்வதுடன் மாமிச உணவுகளை தவிர்த்து வரும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இதைத் தொடர்ந்து இரவு 10.30 மணி வரை வழிபாடுகள் இடம்பெறும். (ஸ்ரீ-3-29)

# சுப்பர்மடம் இந்துமயானத்தை சுற்றி 400 அடி நீள சுற்றுமதில் அமைப்பு

(அல்வாய்)

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட சுப்பர்மடம் இந்து மயானத்தைச் சுற்றி சுமார் 400 அடிநீளமான சுற்றுமதில் 5 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

இங்கு ஒரேநேரத்தில் இரண்டு இறுதிக் கிரியைகளைச் செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் யுத்த காலத்தில் சேதமடைந்த மடத்திற்கு பதிலாக புதிய மடத்தினை அமைப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. (ஸ்ரீ-3-19)

# தொழிற் பயிற்சி நெறிகள்

(தனங்கிளப்பு)

மேசன், தச்சுவேலை, மின்னிணைத்தல், அலுமினியம் பிற்றிங் ஆகிய தொழில்களில் முன்னனுபவம் கொண்ட 15 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் மேற்படி தொழில் அனுபவங்களைப் பெற்று அரச சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்காக வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இப் பயிற்சி நெறியானது எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான முன்பதிவுகளை யாழ்ப்பாண தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்பதாக மேற்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக தொடர்புகளுக்கு 021 222 2526 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-37)

## வீதியில் வெள்ளம் தேங்கி போக்குவரத்துக்கு சிரமம்

(கொழும்புத்துறை)

மிருசிவில் தவசிக்குளம் நாச்சிமார் கோவில் வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் பயணிகளும் ஆலயத்திற்குச் செல்வோரும் சிரமப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மக்கியால் அமைக்கப்பட்ட கிரவல் வீதிகளில் வாகனங்கள் புதைந்து கொள்வதாகவும் இதனால் குறிப்பிட்ட வீதியால் பயணம் செய்ய முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-3-51)

## செயற்குழுக் கூட்டம்

(கொழும்புத்துறை)

இலங்கை சர்வமத ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைந்த சமூக வெளிப்பாட்டின் ஊடாக மனிதநேயத் தீர்வுக்கான சாத்தியமாக்கல் தொடர்பான செயற்குழுக்கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் புனித யாக்கோபு பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நீகா யந்துரே சிறிவிமல தேரர், அருட்தந்தை பிரவீன், கிருபானந்த குருக்கள், மௌலவி சுபியான் ஆகிய சர்வமத பிரமுகர்களின் ஒருங்கிணைப்பில் மேற்படி செயற்குழுக்கூட்டம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-51)

## அலுவலகம் இடமாற்றம்

(கொழும்புத்துறை)

சங்கிலியன் வீதியில் அமைந்துள்ள முன்பள்ளிக் கட்டடம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரின் அலுவலகமாக மாற்றப்படவுள்ளது.

புதிய முன்பள்ளிக் கட்டடம் கேமாஸ் நிறுவனத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்டதையடுத்து முன்பிருந்த முன்பள்ளிக் கட்டடத்தை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினருக்கு ஒப்படைத்துள்ளதாக மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-51)




## கால்கோள் விழா

(அல்வாய்)

பருத்தித்துறை சென்தோமஸ் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையின் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள்விழா எதிர்வரும் 18ஆம் திகதி காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் அருட்சகோதரி ஜெபநாயகி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம அதிதியாக பருத்தித்துறை தூய தோமையர் ஆலய அருட்சகோதரன் அன்ரனி சுரேந்திரகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வின் ஆசியுரையை முன்னாள் நகரசபையின் உபதலைவர் பி. வின்சென்டிபோல் வழங்கவுள்ளார்.

புதிதாக இணைந்த மாணவிகளையும் அவர் தம் பெற்றோர்களையும் வருகை தருமாறு அதிபர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-3-19)

# எங்களவனை அடிக்கும் போது பாயாத சட்டம்
# சிங்களவனை அடிப்பேன் என்ற போது பாய்கிறதே

இனவெறியன் - என் போன்றவர்கள் மீது சுமத்தப்படும் பட்டம் இது. பற்றுக்கும் வெறிக்கும் என்ன வித்தியாசம் என்பதை அறிவார்ந்த பெருமக்கள் கொஞ்சம் விளக்கிச் சொல்லுங்களேன்.பெற்ற தாயைப் பத்து தடவை அம்மா என அழைத்தால்... அதுபற்று. நூறு தடவை அழைத்தால் அதுவெறி என்பார்களோ? அன்புக்கும் பற்றுக்கும் அளவுகோல் வைக்கமுடியுமா? தமிழர் நாகரிகம், தமிழர் பண்பாடு, தமிழர் விளையாட்டு, தமிழர் தொன்மம், தமிழர் பெருமை எனத் தனித்த பெருமிதங்களைத் தமிழர்கள் தன்னகத்தே கொண்டுவிடக்கூடாது என்பதற்காகவே, 'திராவிட... திராவிட' எனத் திசையெங்கும் பரப்புகிறார்களே... என் பாட்டன் ராஜராஜசோழன் கட்டிய பெருவுடையார் கோயிலை தமிழர் கட்டடக் கலை எனச் சொல்லாமல், திராவிடக் கட்டடக் கலை என்று விளிக்கிறார்களே... தமிழனின் தனித்தன்மையைக் குலைத்துவிடத் துடிக்கும் இவர்கள் வெறியர்களா... இல்லை, அதைத் தட்டிக் கேட்பவர்கள் வெறியர்களா?

'நான் தமிழன்' என்பது இனவெறி என்றால், 'நான் திராவிடன்', 'நான் இந்தியன்' என்பதெல்லாம் என்ன வெறிகள்?

எங்கள் தமிழனுக்கு இருக்கும் உலகளாவிய அறிவும் அன்பும் இந்தப்பூமியில் வேறு எவருக்கு இருக்கிறது? 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என எங்கள் முப்பாட்டன் கணியன் பூங்குன்றனாரை முந்திக் கொண்டு சமத்துவம் பேசியவர்கள் எவராவது இருக்கிறார்களா? வள்ளுவன், இளங்கோவடிகள், கம்பன், கணியன் பூங்குன்றன் எனப் பாடிய தமிழ்ப் பெருமகன்கள் எல்லாம் உலகம் உலகம் என்றே உரத்துப் பாடினார்கள். 'யாதும் ஊரே' என்றதாலேயே தமிழனுக்கு என ஓர் ஊர் இல்லாமல் போய்விட்டது.'யாவரும் கேளிர்' என்றதாலேயே கைகொடுக்கக்கூடக் கதியற்றுப் போய்விட்டது. கியூபாவில் கரும்பு வெட்டும் தொழிலாளிகளுக்குக்கூலி கிடைக்காததை நினைத்துக் கதறியவன் தமிழன். ஆனால், தமிழனின் கழுத்து வெட்டப்படும் துயரத்துக்குக்கூட இந்த உலகம் துடிக்காமல் போனதுதான் துயரம்.

மார்க்ஸ், ஏங்கல்ஸ்,இங்கர்சால், கார்க்கி, ஸ்டாலின், மாவோ என உலகப் புரட்சியாளர்களை எல்லாம் உள்ளத்தில் ஏற்றிக்கொண்டவன் தமிழன். ஆனால், எங்களின் தோழர்கள் ஜீவானந்தத்தையும், சிங்காரவேலவரையும் ஆத்திகத்தின் தலையில் ஆணியடித்த இராமசாமி ஐயாவையும் கொண்டாட இந்த உலகில் எவரடா இருக்கிறீர்கள்?

மலையாளத்தின் ஓணம் பண்டிகைக்கும், ஆந்திரத்தின் யுகாதித் திருநாளுக்கும் தமிழகத்தில் விடுமுறை அறிவிக்கப்படுகிறது. ஆனால், எங்களின் பொங்கல் திருநாளுக்கு வேறு எந்த மாநிலத்திலாவது விடுமுறை விடுகிறார்களா? குருநானக் பிறந்தநாளை எங்கள் தமிழகம் கொண்டாடுகிறது. ஆனால், உலகத்துக்கே பொதுமறை படைத்த எங்கள் பாட்டன் வள்ளுவனை வேறு எவராவது கொண்டாடு கிறார்களா? இதை உரக்கச் சொன்னால், உள்ளே தள்ளக்கூடிய இன வெறியனாகி விடுகிறான் சீமான்.

**9 சிறை மீண்ட சீமான் எழுதும் 'திருப்பி அடிப்பேன்' அதிரடி அனல் கனல் தொடர்...**

இந்திய சுதந்திரத்துக்காகப் போராடிய புரட்சியாளன் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், இளங்குருத்து வயதில் தூக்குக்கு கழுத்துக் கொடுத்த பகத்சிங், அகிம்சையால் ஆங்கிலேயனின் அடக்கு முறையையே அடக்கிக்காட்டிய அண்ணல்காந்தி என எத்தனையோ தலைவர்களின் பெயர்களை என் தாய்த் தமிழக உறவுகள் தங்கள் பிள்ளைகள்க்குச் சூட்டி இருக்கிறார்கள். ஆனால், எங்கள் மண்ணில் இருந்து சுதந்திரத்திற்காகப் போராடிய வீர நங்கை வேலு நாச்சியார், வீரபாண்டிய கட்டபொம்மன், சுந்தரலிங்கம், புலித்தேவன் உள்ளிட்ட சாலச்சிறந்த வீரப் பெருமகன்களின் பெயர்களை வடக்கத்திய மண்ணில் எந்த மனிதருக்காவது சூட்டி இருக்கிறார்களா?

நேரு தொடங்கி ராஜீவ் வரை வடக்கத்தியத் தலைவர்களின் பெயர்களைத் தங்கள் வாரிசுகளுக்குச் சூட்டி, "எல்லோரும் நம் நாட்டுத் தலைவர்கள்" எனத் தமிழர்கள் தழுதழுக்கிறார்கள்.நேரு,இந்திரா, ராகுல்,சோனியா, பிரியங்கா என எங்கள் காங்கிரஸ் அபிமானிகள் தங்களின் தாய் வீட்டுச் சொந்தம் போல் உரிமை கொண்டாடி உறவுகளுக்குப் பெயர் வைக்கிறார்களே... ஒரு வடக்கத்திய காங்கிரஸ்காரனுக்காவது கக்கன் என்றோ, காமராஜர் என்றோ பெயர் வைக்கப்பட்டிருக்கிறதா?

எங்கள் தாத்தா ரெட்டைமலை சீனிவாசன், அயோத்திதாசப் பண்டிதர் உள்ளிட்ட தமிழகத் தலைவர்களின் பெயர்கள் வடக்கத்திய மண்ணில் எங்கேனும் வாழ்கிறதா? எங்களின் தியாகம் கூட உங்களின் பார்வையில் தீண்டத்தகாததாகப் போய்விட்டதே... எங்கள் பாட்டன்களின் பங்களிப்பு இல்லாமலா இந்த மாபெரும் தேசத்துக்கு சுதந்திரம் கிடைத்தது? எங்களின் தாத்தாக்களைத் தள்ளி வைக்கும் உங்களிடம் எப்படி ஐயா எதிர்பார்க்க முடியும் எங்கள் இனத்துக்கான சுதந்திரத்தை?


உச்சந்தலையில் இருப்பதற்காக காஷ்மீரைக் கட்டிக்காக்க இலட்சக்கணக்கான கோடிகளை ஒதுக்குகிறீர்கள்... இராணுவத்தைக் குவிக்கிறீர்கள்... எத்தனைபோர் வந்தாலும் காஷ்மீரின் எல்லையைக் கூட தொட்டுவிடக்கூடாது என்பதில் எவ்வளவு உறுதியாக இருக்கிறீர்கள்? ஆனால், எங்களின் மீனவர்கள் வலை உலர்த்தவும், ஓய்வு எடுக்கவும் தக்கதளமாக விளங்கிய கச்சதீவை சிங்கள தேசத்துக்கு வலியப் போய் வழங்கினீர்களே.. தலையில் இருந்தால் தாங்குவீர்கள்... காலுக்கு கீழே இருந்தால் கழற்றி விடுவீர்களா? நீங்கள் கழற்றுவதற்கும் மாட்டுவதற்கும் கச்சதீவு என்ன உங்களின் பழைய செருப்பா?

எங்கள் பாட்டன் ஆண்ட சொத்தை இத்தனை சீக்கிரமா எடுத்துக் கொடுத்தீர்களே... மலையாளச் சேட்டன் வீட்டுச் சொத்தில் ஒரு துளியை எடுத்துக் கொடுக்க முடியுமா உங்களால்?

எந்த இனத்துக்கும் இல்லாத இந்தப் பரிதாபங்களைப் பட்டியல் போட்டால், இனவெறியன் எனப் பட்டம்கட்டிப் பாய்ச்சுகிறார்கள் சட்டத்தை...


சில மாதங்களுக்கு முன்பு இலங்கையில் இருந்து படகு கட்டித் தப்பிவந்த தமிழர்கள் மலேசியக் கடற்பரப்பில் சுற்றிவளைக் கப்பட்டார்கள். கைகொடுத்து உதவ எந்த நாடும் முன்வரவில்லை. அகதி என்கிற அடிப்படையில் கூட உலகத்தின் பார்வை அந்தப் படகின் பக்கம் படவில்லை. தாகத்துக்குத் தண்ணீர் கூட இல்லாமல், ஒரு மாதத்துக்கும் மேலாக அந்தப் படகில் வந்த தமிழர்கள் மனிதக் கருவாடுகளாக மிதந்த போதும் இந்த உலகம் உற்றுப் பார்க்கவில்லை.

அவர்களின் நிலையையும் அவர்கள் நின்ற நிலப்பரப்பையும் பற்றி கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள் தமிழர்களே...மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பரப்புகளை உள்ளடக்கிய கடாரத்தை எங்களின் சோழப் பெருவளத்தான் கட்டியாண்ட காலம் எல்லாம் நெஞ்சுக்குள் மோதுகிறது தமிழர்களே... முப்பாட்டன் ஆண்ட நிலத்தில், பேரப்பிள்ளைகள் பிச்சை கேட்டு நின்ற நிலையை வேறு எந்த இனமாவது எதிர்கொண்டு இருக்கிறதா? 1000 ஆண்டுகள் இடைவெளி என்பது எங்கள் இனத்தில் இந்த அளவுக்கு விளையாடி விட்டதே... வாழ்ந்து கெட்டவர்களாக எங்கள் தமிழினம் வீழ்ந்து கிடக்கிறதே... அகல நிலப்பரப்பை வென்ற போது எல்லாம் எங்கள் தமிழர்கள் அங்கே கொடி ஏற்றினார்களே தவிர, யாரையும் குடியேற்றவில்லை. இத்தனை துயரங்களும் தமிழனின் பெருந்தன்மையால் நிகழ்ந்த பிழைதானய்யா... வந்தவர்களை எல்லாம் வாழவைத்த தமிழினம் சொந்த இனத்தை இன்று வாடகைக்கு வைத்து விட்டதே... இதைச் சொன்னால் நான் இன வெறியனா?



கருங்கல்பாளையம் பொதுக் கூட்டத்தில் இந்த ஆதங்கத்தைக் கொட்டியதற்காக, இறையாண்மை மீறல் எனச் சொல்லி என்னையும் அண்ணன் கொளத்தூர் மணியையும், பெ.மணியரசன் ஐயாவையும் கோவை சிறையில் அடைத்தார்கள்.

## வந்தவர்களை எல்லாம் வாழவைத்த தமிழினம் சொந்த இனத்தை வாடகைக்கு வைத்துவிட்டதே



வைகோவுடன் சீமான்

எங்கள் அறைக்குப் பக்கத்து அறையில் தான் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அடைக்கப்பட்டு இருந்ததாகச் சொன்னார்கள். பெ.மணியரசன் ஐயா, " இந்திய தேசிய விடுதலைக்காக நமது பாட்டன் பூட்டப்பட்டுக் கிடந்த அறைக்குப் பக்கத்து அறையில், தமிழ்த் தேசிய விடுதலைக்காக நாம் பூட்டப்பட்டு இருக்கிறோம். கால இடைவெளிதான் மாறி இருக்கிறதே தவிர, கம்பிகளின் அடக்குமுறை மாறிவில்லை!" என்றார்.


பசி, உறக்கத்தைப் போன்றது தான் இன உணர்வும்... காக்கை, குருவிகளுக்கு நாய், நரிகளுக்கு இருக்கும் இன உணர்வு சீமானுக்கு இருந்தால் மட்டும் வெறியாகிவிடுகிறதா?

" ஓர் இனத்தைச் சேர்ந்த ஒருவன் செய்கிற அனைத்து நன்மைகளையும் ஆதரிப்பது பற்று... அவன் செய்யும் அனைத்துத் தீமைகளையும் ஆதரித்தால்... அது வெறி!"- பெருமகனார் நபிகளின் வார்த்தைகளையே நானும் சொல்கிறேன். என் வார்த்தைகள் தீமைகளைத் திரும்பிக் கூடப் பார்த்தது இல்லை. நாதியற்ற இனத்தின் நன்மைக்காகவே நா தேயப் பேசுகிறேன் இன்னமும் என்னை இன வெறியன் என்றே நீங்கள் உருவகப்படுத்தினால், அதை நான் மறுக்கப் போவது இல்லை.

பிணவெறியனையும், பண வெறியனையும் தலைவன் எனக் கொண்டாடும் உலகில், இனவெறியன் என நான் இடிந்துரைக்கப்படுவது எல்லாவிதத்திலும் எனக்குப் பெருமையே! (தொடரும்)

# எம்மை சர்வதேச போர்க் குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துவதற்கு சிலர் முயற்சி

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் இருந்த முன்னாள் தலைவர்கள் விடுதலைப் புலிகளுக்கு வழங்கிய ஆயுதங்கள் மூலம் இலங்கைப் படையினர் சுடப்பட்டு இறந்ததையும், அங்கவீனர்களாக மாறிய யுகத்தை சிலர் மறந்து போயுள்ளதாக ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை பெலவத்தை டென்சில் கொப்பேபகடுவ மாவத்தையில் அமைக்கப்பட்டுள்ள அங்கவீனமான படையினரின் உற்பத்திகளை விறப்னை செய்யும் நிலையம் ஒன்றை கடந்த 10ஆம் திகதி திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 1980 ஆம் ஆண்டு முதலாவது படைச்சிப்பாய் சுட்டுக் கொல்லப்பட்ட நாள் முதல் இன்று வரை பெரும் எண்ணிக்கையிலான படையினர் கொல்லப்பட்டு விட்டனர்.

பெரும் எண்ணிக்கையான படையினர் அங்கவீனர்களாக மாறி யுள்ளனர்.1983 ஆம் ஆண்டு வடமராட்சி போரை முடிவுக்குக் கொண்டு வர இடமளித்திருந்தால், பெரும் எண்ணிக்கையில் படையினர் கொல்லப்பட்டதையும், அங்க வீனமடைந்ததையும் தடுத்திருக்கலாம். நாட்டின் பொருளாதாரத்திற் கும் பாதிப்புகள் ஏற்பட்டிருக்காது.

நாட்டில் ஆட்சி செய்த சில தலைவர்கள் பயங்கரவாதத்தை ஒழிக்க உதவிகள் கிடைத்தபோது, அதற்கு எதிராகப் படையினர் ஊடாகவே ஆயதங்களை புலிகளுக்கு வழங்கினர்.

அந்த ஆயுதங்களை புலிகள் படையினரை சுட்டுக்கொல்லவும், அவர்களை அங்கவீனப்படுத்தவும் பயன்படுத்திக் கொண்டனர்.

நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னரும், பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட பயணத்தை தடுத்து நிறுத்த சர்வ தேச சக்திகள் மாத்திரமல்ல சில உள்நாட்டு சக்திகளும் முயற்சித்தன.

படையினர் இந்தநாட்டுக்காகவும் இனத்திற்காகவும் நாட்டை அழித்த பயங்கரவாதிகளுக்கு எதிராக மேற்கொண்ட செயற் பாடுகளை மறந்துவிடமுடியாது. சிலர் எம்மை சர்வதேச போர்க் குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல சாட்சியங்களை சேகரித்து வருகின்றனர்.

அவர்கள் எதற்காக இந்த முயற் சிகளை மேற்கொள்கின்றனர் என் பதைப் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேலும் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# நாடும் நடப்பும்

## எம் விதியது செல்லும் வீதி

எங்கள் விதியது செல்லும் வீதியும்
யாழ்-வீதி போல்செல்லும் எம்விதியும்
யார் விட்டவினைப் பயனோ?
பக்குவப் படாதவரால் பக்குவப் படுத்திய
பாதையதன் பருவக் கோளாறோ?
கால பருவங்கள் சூழ வுன்வுருவங்கள் அழியுதே?
ஆமையி னடக்கம் உன் னடக்கமென்றோ
ஓட்டினைப் பார்த்து வுன்நடு மேட்டினை சமைத்தனர்
சபரிமலை பதினெட்டு படிநிலையும் பார்த்தோ
நாட்டினர் பின் தீட்டினர்
இனக் குறிதவறி நெறிமாறி உலாவரும் உன்மீது
தாரைவார்க்க மனமின்றி தம்மை
தாரை வார்த்ததாலோ உன்னைத் தாரை வார்த்தாய்?
வாகனங்கள் தடம்புரளா தாளங்கள் தான் இசைக்க
தடம் புரண்ட எம் வாழ்நிலைத் தாளமும் தானிசைக்க

அறியாதவன்

# ஜோதிட அறிக்கைகளின் படி ஏப்ரலுக்கு பின் அரசாங்கத்திற்கு கெட்ட காலமாம்

## ஐ. தே. க. தெரிவிப்பு

(கொழும்பு)

ஜோதிட அறிக்கைகளின் பிரகாரம் எதிர் வரும் ஏப்ரல் மாதத்திற்கு பின் அரசாங்கத் திற்கு கெட்ட காலம். எனவேதான் அரசு தேர்தல்ககளை முன்கூட்டியே நடத்துகின்றது என்று குறிப்பிட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி எந்தவொரு உள்ளூராட்சி மன்ற தேர் தலையும் நடத்தாது அதிகார சபையாக் குவ தற்கு அரசாங்கம் நினைத் தால் ட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித் துள்ளது.

இது தொடர்பாக நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற விசேட செய்தி யாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.க.வின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க கூறுகையில், இன்றுவியாழக் கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் செயற் குழு கூடவுள்ளது. இதன் போது உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் தொடர்பாக பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும். குறிப்பாக வேட்பாளர் தெரிவுக்குழு பிரசார நடவடிக்கைகள் மற்றும் வேட்பு மனு தாக்கல் தொடர்பான விசேட குழுக்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரசாங்கம் அறிவித்துள்ள வடக்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட 303 உள்ளூராட்சி மன்றங்களிலும் ஐ.தே.க. யானைச் சின்னத்தில் போட்டியிடும். ஏனைய அரசியல் கட்சிகள் ஐ.தே.கவுடன் இணைந்து போட்டியிட விரும்பினால் புதிய கட்சி யாப்பின் பிரகாரம் ஐ.தே.க வின் உறுப்புரிமையைப் பெற வேண்டும்.

ஏனென்றால் கடந்த தேர்தல்களில் ஐ.தே. கவில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பின்னர் கட்சிக்கு எதிராகவே பலர் செயற்படத் தொடங்கினர்.

இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை கூட எடுக்க முடியாமல் போனது. இதனால் தான் கட்டாய உறுப்புரிமை பெற வேண்டுமென்று அறிவித்துள் ளோம்.

மேலும் புதிய முகங்களை அதிகமாக களத்தில் இறக்க ஐ.தே.க. தெரிவுக்குழு தீர்மானித்துள்ளது. (ஸ்ரீ-2)

# திருமலைக்கும் வெளியிடங்களுக்கும் இடையிலான தபால் சேவை பாதிப்பு

(கொழும்பு)

வெள்ள அனர்த்தங்களால் திருகோண மலைக்கும் வெளியிடங்களுக்குமான தபால் சேவை கடந்த இருநாட்களாக பாதிக்கப்பட்டுள்ளன.

வெளியிடங்களுக்கான தபால்கள் ரயில்மூலமாகவே கொண்டு செல்லப்படு கின்றன. ரயில்சேவை தடைப்பட்டதனா லேயே இந் நிலைமை ஏற்பட்டதென திருகோண மலை பிரதான தபாலதிபர் தெரிவித்தார்.

இதேவேளை பிரதான பேருந்து சேவை களிலும் பயணங்களில் தாமதங்கள் காணப்படுகின்றது. வீதிகள் மழை காரண மாக மிக மோசகமாகப் பாதிக்கப்பட்டுள்ளதனால் இந்நிலைமைகள் காணப்படுகின்றன என திருகோணமலை சாலை அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை கந்தளாய் அல்லைப் போக்குவரத்து இன்னும் வழமைக்கு திரும்பவில்லை.

கடற்போக்குவரத்து தற்சமயம் கை கொடுத்துள்ளது.

சேருவில -2 கப்பல் மட்டும் பயணிக்கின்றது. ஆயினும் கடல் சற்றுக் கொந்தளிப்பாகவே உள்ளது. (ஸ்ரீ-2)

# புகையிரத நிலையத்திலிருந்து கைவிடப்பட்ட நிலையில் சிசு மீட்பு

பிறந்த மூன்றே மாதங்களான சிசு வொன்று புகையிரத நிலையத்திலுள்ள கதிரையொன்றில் கைவிடப்பட்ட நிலையில் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

துணியால் நன்றாகச் சுற்றப்பட்ட நிலை யிலேயே மேற்படி சிசு கைவிடப்பட்டிருந் ததாக அப்புத்தளைபொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சிசு தற்போது தியத்தலாவை வைத்திய சாலையில் ஒப்படைக் கப்பட்டுள்ள நிலையில் தற்போது சிசு ஆரோக்கியமாக இருப்பதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் கைவிடப்பட்ட சிசுவின் தாய் குறித்து அப்புத் தளை பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# இலங்கைத் தமிழர்கள் தற்போதும் சொல்லொணா துயரத்தில் உள்ளனர்

## ஸ்ரீ ரவிசங்கர் குருஜி கவலை

இலங்கையில் போர் நிறுத்தத் துக்குப் பின் நான் சென்று அங் குள்ள தமிழர்களை பார்த்த போது அவர்கள் சொல்ல முடியாத துயரத் தில் இருந்தனர். இப்போதும் அதே நிலைமை தான் உள்ளது என ஸ்ரீ ரவிசங்கர் குருஜி கவலை வெளியிட்டுள்ளார்.

பெங்களூரிலிருந்துதனி ஹெலி கொப்டர்மூலம் கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரி மைதானத் திற்கு கடந்த 10 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வந்த அவர் கார் மூலம் சுவாமிமலை கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தார்.

அங்கிருந்து தன்னுடைய சொந்த ஊரான பாபநாசத்துக்குச் சென்று 108 சிவாலயத்தில் நடந்துவரும் மகா ருத்ர யாகத்தில் பங்கேற்றார். பிற்பகல் 3.45 மணிக்கு கார் மூலம் கும்பகோணம் வந்த பூஜ்ய ஸ்ரீ ரவி சங்கர் குருஜி கூறியதாவது, வாழும் கலை அமைப்பு ஆரம்பித்து அதன் 30ஆவது ஆண்டுதற்போது நடந்து வருகிறது.

இதை முன்னிட்டு பாபநாசம் 108 சிவாலயத்தில் சிறப்பு பூஜை செய் யப்பட்டது. தொடர்ந்து மும்பையில் ஐந்து நாள் நிகழ்ச்சிகள் சில அமைப்பின் மூலம் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 22,23 ஆம் திகதி இலங்கையில் 21 ஆயிரம் பேர் தேவாரம் பாடி பௌத்த மத கோட்பாடுகளை கடைப்பிடிக்கும் நிகழ்ச்சியும் சென்னையில் 5 ஆயிரத்து 500 பேர் ஒரே மேடையில் பங்கேற்கும் நாத வைபவ நிகழ்ச்சியும் நடக்கிறது.



ஜெர்மனி பார்லியில் உள்ள ஹிட்லரின் அரங்கில் அந்நாட்டு அரசின் ஒத்துழைப்போடு நடத்தப்படும் 75 ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்று உலகம் அமைதி யாக வாழ சொற்பொழிவு நடத்தப் படும். இலங்கையில் போர் நிறுத் தத்துக்கு பிறகு நான் சென்று அங் குள்ள தமிழர்களை பார்த்த போது அவர்கள் சொல்ல முடியாத துயரத் தில் இருந்தனர்.

இப்போதும் அதே நிலைமை தான் உள்ளது. அவர்களை நான் மீண்டும் சந்தித்து ஆறுதல்படுத்தி புத்துணர்ச்சி அளித்து சுய நம்பிக் கை கொண்டு வர உள்ளேன். இவ்வாறு ஸ்ரீ ரவிசங்கர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்**

* வணிகமாணி/ தொழில் நிர்வாகமாணி இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள் 2010 (முதலாம், 2ஆம், 3ஆம், 4ஆம் வருடம்)
* முதலாம், 2 ஆம் வருட தொழில் நிர்வாகமாணி முதலாம் அரையாண்டு பரீட்சைகள் -2010

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் 17.01.2011 ஆம் திகதி முதல் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மீள் பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்துக்கு ரூபா 50, பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவங்களைப் பீடாதிபதி அலுவலகத்தில் 24.01.2011 அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றனர்.

பதிவாளர்
11.01.2011

(சி-2143)

# கள்ளிக்காட்டு இதிகாசம்

17



கவிப்பேரரசு வைரமுத்து

அன்றும் அப்படித்தான். சிய்யம் தின்று முடித்து வடையின் காதுபிய்த்து டீயில் முதல் முக்கு முக்கியபோது வேர்க்க விறுவிறுக்க வந்த பேயத்தேவரைப் பார்த்து "வாய்யா... வாய்யா..." என்றார் வாய்நிறைய.

"யப்பா பெருமாளு... தேவருக்கு ஒரு வட குடு. எனக்குப் போட்ற மாதிரி டீயும் போடு..." என்று உத்தரவும் போட்டார்.

பெஞ்சின் மறுநுனியில் உட்கார்ந்த பேயத்தேவர் "நாய்க்கர் அய்யா! நல்லா யிருக்கீகளா...?" என்றார் துண்டெடுத்து வேர்வை துடைத்தபடி.

"நான் இருக்கிறது இருக்கட்டும்.நீங்க அன்னிக்குப் பாத்ததுக்கு இன்னிக்கு ஆளு ரொம்ப ஒடஞ்சு போயிருக்கீகளே. மூஞ்சி வாடிக் கெடக்கே...".

"அய்யா நாங்க என்ன ஒங்கள மாதிரி நகத்துல அழுக்கு ஒட்டாத வேலையா செஞ்சுக்கிட்டிருக்கோம்? ஏனோ மண் ணக்கிண்டித் தண்ணி குடிச்சிருக்கோம். மண்ணோட வேணும்னா மல்லுக்கட்ட லாம்... மக்கமார் கூடயும் மல்லுக்கட்ட வேண்டியிருக்கல்ல...?"

"ஏன் ஒங்க பய சின்னு அழிச்சாட்யம் பண்றானா?"

"அவன் பரவாயில்ல... நட்டுவாக் காலி... விறுவிறுன்னு வரும்; வெளக் கமாத்த எடுத்தா ஓடிப்போயிரும். எம் பொண்ணொருத்தி இருக்காளே... சீதேவி செல்லத்தாயி... அவ சீலப்பேனு மாதிரி. உள்ளுக்க இருந்தே உசுர வாங்குறா. பொட்டக் கழுதைய வேறு பெத்துவச் சிக்கிட்டுக் போகமாட்டேங்குறா..."

வடையை வலக்கையிலும் டீயை இடக்கையிலும் ஏந்திக்கொண்டு வடையை ஒரு கடி கடித்துக்கொண்டு டீயை ஒரு குடிகுடித்துக் கொண்டார் பேயத்தேவர்.

டீக்கடையில் தனது பதினொருமணிக் கோட்டா முடிந்ததனால் "சரி வந்த விஷ யத்துக்கு வாரும்" என்றார் நாயக்கர். டீக் கடையில் வரவும் போகவாயுமிருந்த ஆள் அரவம் சற்றே அடங்கிய பின் பெஞ்சின் மறுகோடியிலிருந்து நாயக்கர் பக்கம் நகர்ந்து உட்கார்ந்தார் பேயத் தேவர்.

"அஞ்சும் பத்துமா ஒங்ககிட்ட நாங் குடுத்துவச்ச காசு எம்புட்டு இருக்கும்?"

"ஒங்க கணக்கத் துண்டா வச்சிருக்கேன். எதுக்கு கேக்குறீக?"

"ஒரு அஞ்சுபவுன் சங்கிலி வேணும். ஏங் காசோட பத்தும் பத்தாததுக்கு நீங்களே போட்டு எடுத்துக் குடுங்க, மொளகா நட்ருக்கேன். வெல வித்தா மொத்தமாக்குடுத்திடுறேன். இல்லேன்றாதீக. அந்த அழுகுணிச்சிறுக்கிய அனுப்பி வச்சிருவேன்."

ஒன்றும் பேசாமல் வெட்டவெளி வெறித்தபடி வெள்ளிப்பூண் கைத்தடியைத் தரையில் தட்டிக் கொண்டேயிருந்தார் நாயக்கர். ஒரு தாளலயத்தில் சிந்திக்கிறார் என்று அர்த்தம்.

"மொளகா மொத்தம் எத்தனை குழி?"

"மூணுகுழியும் சொச்சமும்..."

உள்ளுக்குள் ஓடலாயிற்று நாயக்கரின் மனக் கணக்கு. மூணுகுழி சொச்சம். மிளகாய்ச் செடி தரை சாய-சரஞ்சரமாய்க் காய்த்தாலும் அதிகபட்சமாக அறுவது மூடை காய்க்கலாம். முக்கி முக்கி விலை வித்தாலும் மூடைக்கு மூணேகால் கிடைக்கலாம். அறுமூணா- பதினெட்டு-நூத்தி எம்பது; அறு பத்திக்கா- பதினைஞ்சு-நூத்தி எம்பதும் பதினைஞ் சும் நூத்தித்தொண்ணூத்தஞ்சு. இதுல வந்த செலவு போன செலவு ஒரு அறுவது. கழிச்சா நூத்தி முப்ப தஞ்சு. இதுல கைக்கு வாரது எம்புட்டோ? கடனுக்கு வாரது எம்புட்டோ?

பேயத்தேவர் டீயின் கடைசிமடக்குக் குடிப்பதற் குள் கணக்குப் போட்டு முடித்துவிட்டார் நாயக்கர். ஒரு பக்கமாய் ஒருக்களித்துச் சாய்ந்து தொடைவரை நீளும் தன் சட்டைப் பைக்குள் கைவிட்டுக் கண்கள் மூடித் தடவினார். ஆழத்தில் கிடக்கும் காசுகளை. கண் சொல்லாததையும் கை சொல்லும் அவருக்கு. விரலால் பிதுக்கிப் பிதுக்கிச் சீட்டெடுக்கும் கிளி மாதிரி தேவையான காசைத் துல்லியமாய் எடுப்பார்.

கால்ரூபாய் எடுத்துப் பெருமாளிடம் கொடுத்து என்னது கணக்குல இருக்கட்டும். தேவருக்கு எடுத்துக்கிட்டு மிச்சம் குடு என்று மிச்சத்தையும் தடவிப்பார்த்து வாங்கித் தன் கஜானாவின் ஆழத்தில் எறிந்தார்.

தெருவில் நடக்க ஆரம்பித்தன வைரம் பாய்ந்த கிழடுகள் இரண்டும். இச்சி மரத்தடியில் தாயம் விளையாடிக் கொண்டிருந்தார்கள் இளந்தாரிகள். ஒன்றோடொன்று பேசாமல் மூக்குவிடைக்க நின்று கொண்டிருந்தன இரண்டு கழுதைகள். வடையில் ஒட்டிய ஈக்களை ஓட்டிக் கொண்டே தூக்கத்திலும் தொழில் செய்து கொண்டிருந்தாள் ஒரு கிழவி. பள்ளிக்கூடத்திலிருந்து பாதியில் ஓடிவந்த ஒல்லிக் குச்சான் சிறுமியைப் பருத்திமாரெடுத்து ஆவேச மாய்த் துரத்திக் கொண்டிருந்தாள் ஓர் அம்மாகாரி.

இச்சிமரம் கடந்த இடப்பக்கம் திரும்பி நடந்தால் காரைவீடு. வலப்பக்கம் திரும்பினால் நாயக்கரின் சின்னவீடு. நாயக்கர் வலப்பக்கம் திரும்பினார். நாயக்கரிடம் தேவருக்கு லேசாய் நெருடுகிற விஷயம் அதுதான். என்ன இருந்தாலும் நாயக்கருக்கு அது மரியாதை கம்மியான காரியம்தான் என்று கருதி னாலும் "புத்திமாறிப்போன பொண்டாட்டிய வச் சிக்கிட்டு வேற என்ன பண்ணுவாரு பாவம்" என்று மனசின் ஓரத்தில் சின்னதாய் ஒரு சமாதா னமும் சொல்லிக்கொள்வார்.

"சொல்லுமய்யா நாஞ்செஞ்சது தப்பா?" என்று பேயத்தேவரை அவர் செல்லமாய்ச் சீண் டியதுண்டு.

நீண்ட இடைவெளிவிட்டு வார்த்தையின் தொனிகுறைந்து முகத்தைக் கடுவன் பூனை மாதிரி வைத்துக் கொண்டு தப்பு இல்லேன்னு சொல்லமுடியாது. ஆனா ஒங்க தரந்தண்டிக்கு சூழ்நெலைக்கி இதத் தப்புண்ணுஞ்சொல்ல முடியாது."

தகர டப்பாவில் கூழாங்கல் போட்டுக் குலுக் கியதுபோல் குலுங்கிக் குலுங்கிச் சிரிப்பார் நாயக்கர். ஆடும் கடைவாய்ப் பல்லிரண்டின் இடைவெளி தெரியும் அப்போது. "ஒலகத்துல இளமையான பாட்டி யாருன்னு சொல்லுங்க பாப்பம்" என்று விடுகதைபோட்டு அங்கி ருந்து பதில் எதுவும் அசையாததால் 'வப்பாட்டி' என்று அவரே சொல்லி வாய்விட்டுச் சிரிப் பார். தன் காயத்தை-கண்ணீரை மூடிக்கொள் வதற்கு ஒரு போர்வை தேவைப்பட்டிருக்கிறது நாயக்கருக்கு. அந்தப் போர்வையாய் வந்தது ஒரு பொம்பள என்று நம்புகிறார் அவர். அந்தச் சிரிப்புக்குக் கீழே இருப்பது என்ன வலியோ என்ன ரணமோ?

கதவுக்கு எப்படித்தான் காதுகேட்குமோ? பூண்போட்ட கைத்தடிச் சத்தம் நடைவாசலில் கேட்டதுமே ஆளில்லாமல் அரவமில்லாமல் திறந்துகொள்ளும் சின்னவீட்டுப் பெருங்கதவு. கதவு திறக்கும் வேலைக்காரி முகம் காட்டாமல் கதவுக்குப் பின்னால் ஒளிந்துகொள்வது நாயக் கருக்குக் காட்டப்படும் மரியாதை. அங்கே எப் போதும்போல் பேயத்தேவர் திண்ணையோரம் ஒதுங்க ஓர் எட்டு உள்ளே சென்ற நாயக்கர் கழுத்தை மட்டும் திருப்பி "மோர் குடிக்கிறீகளா தேவரே?" என்றார்.

"வேணாம்யா. இப்பதான டீ குடிச்சோம். உள்ளே போயிரெண்டும் மல்லுக்கட்டும்"- தவிர்த்த பேயத்தேவர் ஒரு தவ்வுத்தவ்வி உயரமான திண்ணையில் உட்கார்ந்து கொண்டார்.

வீட்டுக்குள் சென்று பணம் எடுத்து உள்பை யில் பத்திரப்படுத்திக் கொண்டு வெளியே வந்து, தூணில் சாய்ந்து பொடித் தூக்கம் போயி ருந்த பேயத்தேவரைப் பூண்போட்ட கைத்தடி யால் தரையில் தட்டி எழுப்பி "வாங்க போக லாம்" என்றார்.

"தாம்புக்கயிறுச் சங்கிலியெல்லாம் வேணாம்யா. அந்தத் தாழம்பூச்சங்கிலி எடுத்துக்காட்டுங்க அஞ்சு பவுன்ல. உரலில் உலக்கைபோட்டமாதிரி தடிச்ச குரல் நாயக்கருக்கு.

ஆண்டிபட்டிப் பொண்ணாசாரியின் நகைக் கடை தூக்கம் துடைத்துச் சுறுசுறுப்பானது.

(வளரும்)



# லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை குறித்து நோர்வே புலிகளை சாடியது

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலைச் சம்பவம் தொடர்பில் நோர்வே அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளை சாடியிருந்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இவ்வாறான நிலைப்பாட்டை கொண்டிருந்தாலும் இலங்கை மக்களும் உலக மக்களும் இந்தப் படுகொலைச் சம்பவத்திற்கு தமிழீழ விடுதலைப்புலிகளே பொறுப்பு என கருதுவதாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை தொடர்பில் நோர்வே அரசாங்கம் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தது.

சிறுவர்களை பலவந்தமான முறையில் படையில் இணைத்துக்கொள்வது குறித்தும் நோர்வே அதிருப்தி வெளியிட்டிருந்தது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறும் வகையில் செயற்படக்கூடாது எனவும் அவ்வாறு செயற்பட்டால் சர்வதேச சமூகத்தின் கண்டனத்தை சம்பாதிக்க நேரிடும் என எச்சரிக்கை விடுத்திருந்தது.

புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட நோர்வே அரசாங்கத்தின் எச்சரிக்கை கடிதத்தின் பிரதி அமெரிக்கத் தூதரகத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவில் மூவர் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் வெள்ளம் காரணமாக நேற்றுக் காலை மூவர் உயிரிழந்துள்ளனர்.

அம்பிலாந்துறை மத்தியைச்சேர்ந்த கந்தப்போடி என்பவரும் அம்பிலாந்துறை மேற்கைச்சேர்ந்த அருச்சுனன் என்பவரும் முனைக்காட்டில் ஒருவரும் வெள்ளத்தால் உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் உயரிழந்ததை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் உறுதிப்படுத்தினார். (ஸ்ரீ-2)

# மன்னாரில் 300 பேரிடம் சாட்சியங்கள் பதிவு

(கொழும்பு)

மன்னாரில் 300 பேரிடம் சாட்சியங்கள் திரட்டப்பட்டுள்ளதாக உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக மன்னாரில் சாட்சியங்கள் திரட்டப்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொலைகள், கடத்தல்கள் மற்றும் காண ாமல் போதல் சம்பவங்கள் தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

வாய்மொழி மூலமாகவும், எழுத்து மூலமாகவும் பண்டிவிரிச்சான் மற்றும் மடு ஆகிய பிரதேசங்களில் சாட்சியங்கள் திரட்டப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இளைஞர், யுவதிகள் கடத்தல் மற்றும் காணாமல் போதல்கள் தொடர்பில் அதிகளவான பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர். விருப்பத்திற்கு மாறாக தமிழ் இளைஞர்களை புலிகள் எவ்வாறு பலவந்தமாக படையில் இணைத்துக்கொண்டார்கள் என்பது குறித்து சாட்சியளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)


# சுவிஸில் புலிகளுக்கு பணச்சேகரிப்பில் ஈடுபட்டதாகக் கூறி 10 பேர் கைது

(கொழும்பு)

சுவிற்ஸர்லாந்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு பணம் சேகரித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக சுவிற்ஸர்லாந்து நாட்டு அரச தரப்பு சட்டத்தரணியினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் அல்பைன் பிரதேசத்தில் 23 வெவ்வேறு பகுதிகளில் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதலின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் புலிகள் அமைப்புக்கு கடந்த 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பண சேகரிப்பில் ஈடுபட்டதாகவும் சுவிஸ் பிராங் பல மில்லியன்களை அவர்கள் புலிகள் அமைப்பிற்காக சேகரித்துள்ளதாக தாம் சந்தேகிப்பதாகவும் அரச சட்டத்தரணியினர் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நல்லூர்த் தொகுதிக் கிளையின் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உரையாற்றுவதையும் அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன், சூழலியலாளர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படத்தில் காணலாம்.

# ரயில் பாதைகளுக்காக இந்தியாவுக்கு அளவுக்கதிகமான பணம் வழங்கப்படுகிறது

## இலங்கை ரயில்வே ஊழியர்களை பாதுகாக்கும் அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் புகையிரத பாதைகளை அமைப்பதற்காக இந்தியாவுக்கு இலங்கை அரசாங்கம் அளவுக்கதிகமான பணத்தை வழங்குவதாகவும் இலங்கையினால் அதை செலவு குறைந்த முறையில் மேற்கொள்ள முடியும் எனவும் இலங்கை ரயில்வே ஊழியர்களின் உரிமைகளையும் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கான அமைப்பு நேற்று முன்தினம் கூறியுள்ளது.

வடக்கில் 250 கிலோமீற்றர் நீளமான புகையிரதப் பாதையை அமைப்பதற்கு அரசாங்கம் 200 மில்லியன் ரூபாவை வழங்குவதாகவும் இலங்கை புகையிரதத் திணைக்களத்தினால் அதை 75 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ள முடியும் எனவும் அவ்வமைப்பு தெரிவித்தது.

சுனாமியால் முற்றாக சேதமடைந்த 42 கிலோமீற்றர் நீளமான காலி -மாத்தறை புகையிரத பாதையை நாம் 57 நாட்களில் நிறைவு செய்தோம். இந்திய நிறுவனத்திடம் இது குறித்து கேட்கப்பட்டபோது அதற்கு அதைவிட அதிக காலம் செல்லும் என தெரிவித்திருந்தது என மேற்படி அமைப்பின் ஏற்பாட்டாளர் சுமதிபால மானவடுவ தெரிவித்தார்.

இருநாடுகளின் அரசாங்கங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் காரணமாக இலங்கை அரசாங்கம் பெருந்தொகைப் பணத்தை இந்தியாவுக்கு வழங்க வேண்டியுள்ளது.

ஏன் இந்தப் புகையிரதப் பாதைகளை நாமே அமைத்துக்கொள்ள முடியாது என அரசாங்கத்திடம் நாம் கேட்கிறோம். நாம் எமது திறமையை நிரூபித்துள்ளோம். எம்மிடம் 5 ஆயிரம் ஊழியர்கள் உள்ளனர்.

அந்த எண்ணிக்கை போதாது எனில் வேலைவாய்ப்பற்ற மக்களை அரசாங்கம் பணியில் இணைத்துக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# லாப் எரிவாயுவின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களின் விலையோடு எரிவாயுவின் விலையும் போட்டி போட்டுக்கொண்டு உயர்ந்து கொண்டு செல்கின்றது.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 12.5 கிலோ கிராம் நிறையுடைய லாப் எரிவாயுவின் விலை 36 ரூபாவால் உயர்ந்துள்ளது என லாப் காஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

உலக சந்தையில் காஸினது விலை உயர்ந்துள்ளதால் லாப் காஸ் நிறுவனம் நுகர்வோர் கூட்டுறவு சபையின் அங்கீகாரத்துடன் விலை அதிகரிப்பை மேற்கொண்டுள்ளது.

அதற்கமைய 12.5 கிலோ கிராம் நிறையுடைய லாப் காஸ் சிலிண்டரின் புதிய விலை ஆயிரத்து 556 ரூபாவாகும்.

இதேவேளை லிட்ரோ எரிவாயுவின் விலையில் எவ்வித மாற்றமும் இல்லை என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. தற்போது லிட்ரோ காஸ் சிலிண்டரது விலை ஆயிரத்து 652 ரூபாவாகும்.

மேலும் லிட்ரோ எரிவாயுவின் விலை உயர்வு தொடர்பில் இந்த மாத இறுதியில் தீர்மானிக்கப்படும் என நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் றூமி மர்சூக் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மன்.மாவட்ட புதிய அரச அதிபராக என்.வேதநாயகம் பொறுப்பேற்றார்



(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தின் 21 ஆவது புதிய அரசாங்க அதிபராக நேற்று முன்தினம் என். வேதநாயகம் உத்தியோகபூர்வமாக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதுவரை காலமும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றி வந்த ஏ.நிக்கலொஸ்பிள்ளை திடீர் இடமாற்றம் செய்யப்பட்ட நிலையில் கொழும்பில் உள்ள பொது நிர்வாக அமைச்சிற்குச் செல்லும் நிலையிலேயே வேதநாயகம் புதிய அரசாங்க அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் கடந்த காலங்களில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றி வந்த நிலையிலேயே தற்போது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை மன்னார் மாவட்ட செயலகத்தில் திட்டப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்த பத்திநாதன் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராகப் பதவி உயர்வு பெற்ற நிலையில் நேற்று முன்தினம் தனது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார். (ஸ்ரீ-2)

# இராணுவ முகாம்களும் வெள்ளத்தில் மூழ்கின

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள கடும்மழை காரணத்தினால் இராணுவ முகாம்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தந்திரிமலை, பொயகொட முகாம்கள் நீரில் மூழ்கியுள்ளதாகவும் பிரதேசத்தில் 260 படையினர் வெள்ளத்தில் சிக்கியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

கடுமையான வெள்ளம் ஏற்பட்டுள்ளதனால் படையினரை தரைவழியாகச் சென்று மீட்க முடியாது எனவும் நேற்றைய தினம் ஹெலிகொப்டர்கள் மூலம் மீட்பதற்கான முயற்சி எடுக்கப்படும் எனவும் அனுராதபுர அனர்த்த நிவாரணக் குழு அறிவித்துள்ளது.

வெள்ளத்தில் சிக்கிய இருபது படையினர் ஏற்கனவே மீட்கப்பட்டு தந்திரிமலை விகாரையில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் மல்வத்து ஓயா பெருக்கெடுத்து ஓடுவதனால் இந்த வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# தேசிய அபிவிருத்தி சார்பாக இலவசக் கல்வி முறைமை உண்மையில் வெற்றி கண்டுள்ளதா? ①

**கல்விக்கும் அபிவிருத்திக்கும் இடையிலான தொடர்பு**

இலங்கையில் 1776 ஆம் ஆண்டிலேயே கல்விக்கும் அபிவிருத்திக்குமான தொடர்பு இனங்காணப்பட்டுள்ளது. அடம்ஸ் ஸிமித்தின் கருத்துப்படி மனித மூலத்தின் மீதான முதலீடு '' கல்வி'' என்னும் எண்ணக்கரு உருவாகி, 20 ஆம் நூற்றாண்டின் பின்னரை பகுதிகளிலே கல்விக்கும் அபிவிருத்திக்குமான நேரடி தொடர்பு உருவம் பெற்றது. இது மனிதவள அபிவிருத்தி ஊடாகவே தோற்றம் பெறுகிறது.

மனிதவள அபிவிருத்தி என்பது ''ஒரு சமூகத்தில் வாழ்கின்ற சகல உறுப்பினர்களினதும் அறிவு , திறன்கள் மற்றும் இயல் அளவுகளை மேம்படுத்தும் செயன்முறை'' என வரையறுக்கலாம். முன்னைய பொருளியலாளர்களின் கருத்துப்படி உழைப்பு, மூலதனம் ஆகிய இரு காரணிகளின் தொழிற்பாடே பொருளாதார வளர்ச்சி என கருதப்பட்டது. மனித வளம், உழைப்பு என்பதில் உள்ளார்ந்துள்ளது. மூலதனமென்பது இயற்கையான மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்களை உள்ளடக்கியுள்ளது.

சுருங்கக் கூறின் பொருளாதார வளர்ச்சி என்பது மனிதன் மற்றும் பொருள் சார் மூலதனத்தின் தொழிற்பாடென வரையறுக்கப்படுகிறது.

''சகல மூலதனங்களிலும் கூடிய பெறுமதி உடையது மனிதர்களின் மீது செய்யப்படும் முதலீடே ஆகும்...'' என அல்பிரட் மார்ஷல் கூறுகிறார்.

உண்மையில் '' துரித பொருளாதார வளர்ச்சி''என்பது எல்லா சமூகங்களினதும் பிரதான இலக்கு கருதின் ஒரு ஆக்கபூர்வமான பொருளாதாரத்திற்கு தேவைப்படுகின்ற அறிவு, திறன்கள் மற்றும் ஊக்கிகளை வழங்குவதற்கான மனிதவள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும்.

கல்வி மீதான முதலீடுகள் ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டும் என்னும் கருத்து நிராகரிக்கப்பட முடியுமாயின் துரித பொருளாதார வளர்ச்சி எனும் இலக்கும் நிராகரிக்கப்பட வேண்டியதாகும்.

தொழிநுட்பவியல் பொறிகளின் வினைத்திறனை அதிகரிப்பது போல கல்வியானது குறிப்பாக உயர் கல்வி மனித வலுவின் வினைத்திறனை அதிகரிக்கிறது. கல்வியானது மனித வலுவை வழங்குவது மாத்திரமன்றி மனிதனின் திறன்களை மேம்படுத்துவதின் மூலம் ஊழியப்படையின் உற்பத்தித் திறனையும் அதிகரிக்கிறது. பொருளியல் கருத்துப்படி''ஏனையவை மாறாவிட்டால் உற்பத்தித்திறன் ஊதியத்தை நிர்ணயிக்கிறது'' எனக் கூறலாம். கல்வி மட்டம் உயர ஊதியமும் பொதுவாக அதிகரிக்கிறது. ஊதிய உயர்வு உற்பத்தித் திறன் உயர்வைக் காட்டுகிறது. உற்பத்தித்திறன் உயர்வு பொருளாதார வளர்ச்சியைக் காட்டி நிற்கிறது. இதன் மூலம் கல்விக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் இடையில் உள்ள நெருக்கமான உறவு நிரூபிக்கப்பட முடியும்.


> ''கல்வியானது சமூகப் பொறுப்பும் பொருளியல் ரீதியான உற்பத்தித்திறனும் கொண்டநேர்மையான , கட்டொழுங்குள்ள,தேசபக்தியுள்ள குடிமக்களை உருவாக்க வேண்டும்''

கல்வியானது தன்னளவில் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்த முடியும். அதற்காக ஒரு விரிவு பெரும் பொருளாதாரத்தின் சுயதொழில் வாய்ப்பை அதிகரிக்கும் நோக்குடன் கல்வி அமைப்பு தொழில் சார்ந்ததாக மாற்றப்பட வேண்டும்.

கல்விக்கும் அபிவிருத்திக்கும் இடையிலான நேர்க்கணியத் தொடர்பை உலக நாடுகளின் அபிவிருத்தி மட்டங்களை ஒப்பிடுவதன் மூலம் தெரிந்து கொள்ள முடியும். பொது வாக தலா வீத வருமானம், மொத்தப் பொதுச் செலவின் அடிப்படையிலான கல்வி அல்லது உயர் கல்வி மீதான செலவு, ஒவ்வொரு வயதுப் பிரிவு அல்லது மொத்தச் சனத் தொகையின் அடிப்படையில் உயர் கல்வி சேர் வீதம் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்பவியல் சார்ந்த ஆளணியின் அளவு ஆகியன இத்தகைய ஒப்பீட்டுக்கு உதவக் கூடிய குறி காட்டிகளாகும்.

யுனஸ்கோ புள்ளி விபர வருடாந்த நூல், உலக அபிவிருத்தி அறிக்கைகளின் படி நாடுகளின் கல்விச் செலவு குறைவாக இருப்பின் மேலுள்ள குறிகாட்டிகளும் தாழ் நிலையில் உள்ளன என்பதை சுட்டிக்காட்டுகின்றன. ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா , சுவீடன், பிரான்ஸ், இங்கிலாந்து, கனடா ஆகிய அபிவிருத்தி அடைந்த நாடுகள் தேசிய வருமானத்தில் 4% - 8% வரையிலான கல்வி மீதான பொதுச் செலவை கொண்டிருக்கின்றன. வயது மற்றும் சனத்தொகை அடிப்படையில் முறையே 40%- 90% வரையிலான மூன்றாம் நிலைக் கல்வி சேர்வு வீதத்தை கொண்டுள்ளன. மேலும் 10 ஆயிரம் சனத் தொகைக்கு 20 -70 வரையிலான விஞ்ஞான (விஞ்ஞானிகள் , பொருளியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள்) ஆளணியினரையும் , 10 ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமான தலா வருமானத்தையும் கொண்டுள்ளன.

ஆனால் அபிவி ருத்திய டைந்து வரும் நாடுகள் 1.4% -4.9% வரை யிலான கல்வி மீதான பொதுச் செலவைக் கொண்டுள்ளதுடன் வயது மற்றும் சனத்தொகை அடிப்படையிலான மூன்றாம் நிலைக்கல்வி சேர்வு வீதம் 1.4%-30% வரையும், 0.4%(இலங்கை) முதல் 3% (பிலிப்பைஸ்) வரையும் வேறுபட்டும் உள்ளன. மேலும் விஞ்ஞான தொழில்நுட்ப ஆளணியினர் 1.1 (பாகிஸ்தான்) முதல் 2.2 (இல ங்கை வரையுள்ளனர். தலா வீத வருமானம் 5 ஆயிரம் அமெரிக்க டொலருக்கும் குறைவாக உள்ளது.



கல்விக்கும்,அபிவிருத்திக்கும் இடையில் இவ்வாறானதொரு எளிமையான தொடர்பு இருக்கின்ற காரணத்தினால் கல்வி மீது பெரும் தொகையான பணத்தை செலவழித்தால் அபிவிருத்தி மட்டமும் அதிகரிக்கும். எனவும் கல்விக்கும் அபிவிருத்திக்கும் இடையில் ஒரே சீரான தொடர்பு இருப்பதாகவும் கருத முடியாது.


தம்பியப்பா காங்கேசபிள்ளை
முன்னாள் அதிபர்
பலாலி ஆசிரியர் கலாசாலை

உண்மையில் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதமானது முதலீட்டின் அளவில் மாத்திரமன்றி அம் முதலீட்டின் கட்டமைப்பு அல்லது உற்பத்தித் திறனிலும் தங்கியுள்ளது.

மேலும் அபிவிருத்தி மீதான கல்வியின் உண்மையான பங்களிப்பு அதன் அளவிலும் தங்கியுள்ளது. வேறு வார்த்தையில் கூறுவதாயின் சமத்துவம், உன்னதம் , வினைதிறன் (வினைத்திறன்) ஆகிய மூன்று முக்கிய கூறுகளை சிறந்த கல்வி கொண்டுள்ளது. (தொடரும்)

# களனியில் சிவப்பு,பச்சை கொடிகளை பறக்க விட அனுமதிக்கமாட்டேன்

## அமைச்சர் மேர்வின் தெரிவிப்பு



(கொழும்பு)

களனிப் பிரதேசத்தில் பச்சை மற்றும் சிவப்புக் கொடிகளை பறக்கவிட முடியாது என பொதுமக்கள் தொடர்பு அமை ச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

களனிப் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.களனி பிரதேசத்தில் சிவப்பு மற்றும் பச்சைக் கொடிகளை பறக்க விட அனுமதிக்கமாட்டேன் என்றும் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரங்களை இலக்குவைத்து அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டிய தேவை எழுந்துள்ளதாகவும் கட்சி பேதங்களை களைந்து அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

களனி பிரதேசசபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இந்த நிலைமைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

# கடற்படை தளபதிக்கு அட்மிரலாக பதவியுயர்வு



இலங்கையின் கடற்படை தளபதி திஸரசமரசிங்கவிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவி உயர்வு வழங்கியுள்ளார்.

கடற்படைத் தளபதியாக கடமையாற்றி வந்த வைஸ் அட்மிரல் திஸர சமரசிங்க தற்போது அட்மிரலாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இந்தப் பதவி உயர்வு நேற்றைய தினத்திலிருந்து அமுலுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தின் போது திஸர சமரசிங்க முக்கிய பங்காற்றியுள்ளதாகவும் குறிப்பாக வடக்கு- கிழக்கு கரையோரப் பகுதி பாதுகாப்பு மற்றும் ஆயுதக் கடத்தல்களுக்கு எதிராக காத்திரமான முறையில் செயற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)

# வெலிக்கடை சிறையில் பெண் கைதி மீது தாக்குதல்

வெலிக்கடை மகளிர் பிரிவில் உள்ள வீரசிங்கம் சரோஜினி (வயது 32) என்ற பெண் அரசியல் கைதி நேற்று முன்தினம் அங்குள்ள சிறைக்காவல் அதிகாரிகளினால் தாக்குதலுக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இனோமா, ரசிக்கா என்ற இரு சிறைச்சாலை காவலர்களினாலேயே இவர் கடுமையான முறையில் தாக்குதலுக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைய காலங்களில் தமிழ் அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளில் உள்ள காவலர்களாலும் வேற்று இன கைதிகளாலும் தாக்குதலுக்குள்ளாகும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-2)

# புனர்வாழ்வு முகாம்களில் உள்ள புலிச் சந்தேகநபர்களிடம் விசாரணை

(கொழும்பு)

வவுனியா பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு முகாம்களில் தடுத்த வைக்கப்பட்டுள்ள விடுலைப்புலி உறுப்பினர்கள் என சந்தேகிக்கப்படும் சுமார் 4 ஆயிரத்து 800 இளைஞர்,யுவதிகளிடம் புலனாய்வுப் பிரிவினரும் பயங்கரவாத தடுப்பு பிரிவினரும் மீண்டும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து சென்றுள்ள 300 விசேட பொலிஸ் குழுக்கள் சந்தேக நபர்களிடம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன் சந்தேக நபர்கள் தரம் பிரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தரம் பிரித்துள்ளபடி பல்வேறு குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்துக் கொண்டிருந்த போதிலும் எவ்வித குற்றச் செயல்களிலும் ஈடுபடாத நபர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்கள் புனர்வாழ்வு முகாம்களில் இருந்து விடுவிக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் என குற்றஞ் சுமத்தப்பட்டுள்ள தமிழ் இளைஞர் , யுவதிகளை சமூகத்துடன் இணைக்கும் நோக்கத்தில் அவர்களிடம் மீண்டும் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர்களென கருதப்படும் பெரும் அளவானவர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு விட்டதாகவும் அவர்கள் குறித்த சகல தகவல்களும் திரட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)





கிளி முருகானந்த மகாவித்தியாலயத்தில் ஆறாம் தரத்திற்கான ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் அண்மையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் மங்கல விளக்கேற்றுவதையும் பாடசாலை அதிபர் தி.வரதன் உரையாற்றுவதையும் ஆங்கில மொழிமூலமான கையேடுகளை பிரதம விருந்தினர் ஆசிரியர்களுக்கு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள தொண்டுநிறுவனங்களை அனுமதிக்க வேண்டும்

## அரியநேத்திரன் எம்.பி.கோரிக்கை

(கொழும்பு)

கிழக்குமாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு உள்நாட்டு, வெளிநாட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை அரசு அனுமதிக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெறுமனே வெள்ள நிவாரணம் தொடர்பான அவசர மாநாட்டையோ உறுதிமொழிகளையோ வழங்குவதில் எந்தப் பயனும் இல்லையென அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது, மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளம் காரணமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து பொதுக் கட்டடங்களில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு உணவு ஓரளவு கிடைக்கின்றபோதும் மேலும் அத்தியாவசியத் தேவைகளான தற்காலிக மலசலகூட வசதி மற்றும் அவசர வைத்திய வசதிகள், போர்வைகள், நுளம்பு வலைகள், சிறுவர்களுக்கான விசேடதேவைகள் என்பன இன்மையால் பெரிதும் கஷ்டப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள மக்களை மீட்பதற்கு தொண்டர்களும் மீட்புப் பணியாளர் களும் அவசரமாக தேவையாக உள்ளனர்.

அத்துடன் முகாம்களில் உள்ள அனைத்து மக்களையும் அவர்களின் தேவைகளையும் கவனிப்பதற்கு அந்தப் பகுதியில் உள்ள கிராமசேவையாளரால் மாத்திரம் முடியாது.

முகாம்களில் உள்ள மக்களுக்குத் தேவையான உணவுகளை வழங்குவதற்கு தயாராக இருக்கிறோம் என அரசு அறிவித்துள்ளது. ஆனால் இந்த உணவுகள் மாத்திரம் மக்களுக்கு போதுமா எனவே இந்த அனர்த்த நிலைமையை கருத்திற்கொண்டு குறிப்பாக சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நிவாரணப் பணிகளை சுயமாக மேற்கொள்ள அரசு அனுமதிக்கவேண்டும் என அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# புதிய நிர்வாகசபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு பாரதி சனசமூக நிலையத்தின் இவ்வாண்டிற்குரிய புதிய நிர்வாக சபை கடந்த 10 ஆம் திகதி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் தலைவராக பெ.மதிகாந்தன், செயலாளராக செ.கேதீஸ்வரன், பொருளாளராக வே. சிவசுப்பிரமணியம் , உபதலைவராக க. குமாரசாமி, உபசெயலாளராக வி.சிவபாலன், நிர்வாக உறுப்பினர்களாக ப.குணபாலு, சி.தவசீலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ)

# கொழும்பு நகரை அழகுபடுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

கொழும்பு நகரின் பிரதான வீதிகளின் இருபுறமும் பூச்சாடிக ளை வைக்குமாறு இராணுவத்தி னர் வீதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர் களை அறிவுறுத்தியுள்ளனர். நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரான பாதுகாப்பு செயலாளர் கொழும்பு நகரை அழகுப்படுத்தும் பொறுப்பை பாதுகாப்புப் படையினருக்கு வழங்கியுள்ளார். இதன்படி கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி மற்றும் டுப்பிளிகேஷன் வீதிகளில் உள்ள வர்த்தகர்களை தனித்தனியாக சந்தித்துள்ள இராணுவத்தினர் தமது வர்த்தக நிலையங்களுக்கு எதிரில் அலங்கரிப்புக்களை மேற்கொள்ளுமாறு கூறியுள்ளதுடன் பூச்சாடிகளையும் வைக்குமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த உத்தரவு நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறதா என்பதை ஆராய்வதற்காக சில தினங்கள் சென்றபின் தாம் வந்து கூறியவற்றுக்கு ஏற்றவாறு அலங்கரிக்கப்பட்டிருக்கிறதா என பார்க்கப் போவதாக அறிவித்துவிட்டு சென்றுள்ளனர்.

கொழும்பு நகரில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு எதிரில் வைக்குமாறு கூறப்பட்டுள்ள பூச்சாடிகளை தயாரிக்கும் பொறுப்பை பாதுகாப்புச் செயலாளர் விமானப் படைச் சிப்பாய்களுக்கு வழங்கியுள்ளார். (ஸ்ரீ-2)

# கிழக்கில் மீன்பிடித் தொழில் கடுமையாகப் பாதிப்பு

## விவசாய நிலங்கள் அழிவு

(கொழும்பு)

தொடரும் பாதகமான கால நிலையால் கிழக்கு மாகாணம் கடும் அழிவைச் சந்தித்துள்ளது.

அங்கு 12 இலட்சத்து 32 ஆயிரம் ஏக்கர் பயிர் நிலங்கள் முற்றாக அழிந்துள்ளதுடன் மீன்பிடித்தொழிலும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் தமது தொழிலை கைவிட்டு இடம்பெயர்ந்துள்ளனர். கடந்த இரு தினங்களாக திருமலைப் பகுதியில் பெருமளவான படகுகள் கடலுக்குச் செல்லாது கரை யிலேயே தரித்து நிற்கின்றன. இந்த நிலை மேலும் சில நாட்கள் தொடரலாம் என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய காலநிலையால் 13 மாவட்டங்கள் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளன.

அங்கு எட்டு இலட்சத்து 63 ஆயிரத்து 773 பேர் பாதிப்படைந்துள்ளனர். 13பேர் இறந்துள்ளனர்.

மட்டக்களப்பு, பொலநறுவை, மொனராகலை, நுவரெலியா, அம்பாறை, திருமலை,மாத்தளை, இரத்தினபுரி, குருநாகல், அனுராதபுரம், பதுளை, கேகாலை, கண்டி ஆகிய மாவட்டங்களே அதிக பாதிப்புக்களை சந்தித்துள்ளன. (ஸ்ரீ)

# 2011.01 13 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ *1610* - கலிலியோ கலிலி வியாழனின் 4 ஆவது துணைக்கோளைக் கண்டு பிடித்தார்.

★ *1658* - இங்கிலாந்தின் இராணுவ மற்றும் அரசியல் தலைவருமான ஒலிவர் குரொம்வெல்லுக்கு எதிராக சதித் திட்டம் தீட்டிய எட்வார்ட் செக்ஸ்பி என்பவன் லண்டன் கோபுரசிறையில் இறந்தான்.

★ *1830* - லூசியானாவில் நியூ ஓர்லீன்ஸ் நகரில் பெரும் தீ பரவியது.

★ *1840* - லோங் தீவில் லெக்சிங்டன் என்ற நீராவிக்கப்பல் மூழ்கியதில் 139 பேர் கொல்லப்பட்டனர்.

★ *1847* - கலிபோர்னியாவில் மெக்சிக்கோ-அமெரிக்கப் போர் காகுவெங்கா என்ற இடத்தில் எட்டப்பட்ட உடன்பாட்டின் மூலம் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டது.

★ *1908* - பென்சில்வேனியாவில் ரோட்ஸ் ஒப்பேரா மாளிகையில் தீப்பிடித்ததில் 171 பேர் கொல்லப்பட்டனர்.

★ *1915* - இத்தாலியின் அவசானோ பிரதேசத்தில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 29ஆயிரத்து 800 பேர் கொல்லப்பட்டனர்.

★ *1930* - மிக்கி மவுஸ் கார்ட்டூன் துணுக்குகளாக முதன் முதலாக வெளிவரத் தொடங்கியது.

★ *1938* - இங்கிலாந்து திருச்சபை சார்ள்ஸ் டார்வினின் கூர்ப்புக் கொள்கையை ஏற்றுக் கொண்டது.

★ *1939* - அவுஸ்திரேலியாவில் விக்டோரியா மாநிலத்தில் 20ஆயிரம் சதுர கி.மீ. நிலம் காட்டுத்தீயினால் அழிந்தது.71 பேர் கொல்லப்பட்டனர்.

★ *1942* - ஹென்றி போர்ட் பிளாஸ்டிக்கினால் ஆன தானுந்துக்கான காப்புரிமம் பெற்றார்.

★ *1953* - யூகொஸ்லாவியாவின் தலைவராக மார்ஷல் ஜோசிப் டீட்டோ தெரிவு செய்யப்பட்டார்.

★ *1964* - கல்கத்தாவில் இந்து-முஸ்லிம் கலவரம் மூண்டதில் நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

★ *1972* - கானாவில் இராணுவப் புரட்சி இடம் பெற்றது.

★ *1982* - வோஷிங்டன், டிசியில் விமானம் ஒன்று பாலம் ஒன்றில் வீழ்ந்து நொருங்கியதில் 78 பேர் கொல்லப் பட்டனர்.

★ *1985* - எதியோப்பியாவில் பயணிகள் தொடரூந்து ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 428 பேர் கொல்லப்பட்டனர்.

★ *1991* - சோவியத் படைவீரர்கள் லித்துவேனியாவில் சோவியத் ஆட்சிக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட்ட பொதுமக்களைத் தாக்கி 14 பேரைக் கொன்றனர்.

★ *1992* - இரண்டாம் உலகப் போரின் போது கொரியப் பெண்களை பாலியல் அடிமைகளாக கட்டாயமாக சிறைப் படுத்தி வைத்திருந்தமைக்காக ஜப்பான் மன்னிப்புக் கோரியது.

★ *2001* - எல்சல்வடோரில் இடம்பெற்ற நில நடுக்கத்தில் 800 பேர் கொல்லப் பட்டனர்.

### பிறப்புகள்

★ *1864* - வில்ஹெம் வியென், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ.1928)

★ *1879* - மெல்வின் ஜோன்ஸ், அமெரிக்கர் (இ. 1962)

★ *1911* - ஆனந்த சமரக்கோன், சிங்கள இசைக் கலைஞர் (இ. 1962)

★ *1927* - சிட்னி பிரென்னர், நோபல் பரிசு பெற்ற பிரித்தானியர்

★ *1946* - ஆர்.பாலச்சந்திரன், கல்வியாளர், கவிஞர் (இ. 2009)

★ *1949* - ராகேஷ் சர்மா, விண்வெளியில் பறந்த முதல் இந்தியர்.

### இறப்புகள்

★ *1906* - அலெக்சாண்டர் பப்போவ், ரஷ்ய இயற்பியலாளர் (பி. 1859)

★ *1941* - ஜேம்ஸ் ஜோய்ஸ், ஐரிய எழுத்தாளர் (பி. 1882)



2006 - சீனாவின் தென் கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற நிலநடுக்கத்தினால் 13ஆயிரம் வீடுகள் இடிந்து தரை மட்டமாயின.

## 22 ஆண்டுகளுக்குப் பின் கூடும் நாடாளுமன்றம்

ஜனநாயகத்திற்கு வழி வகுக்கும் வகையில் 22 ஆண்டுகளுக்கு பின்னர் மியன்மார் இராணுவ ஆட்சியாளர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்ட முடிவு செய்துள்ளனர்.

மியன்மார் நாட்டை ஆட்சி செய்யும் இராணுவத்தினர் கடந்தாண்டு நவம்பர் மாதம் தேர்தல் நடத்தினர். இராணுவ ஆட்சி ஆதரவு பெற்ற ஒருங்கிணைந்த மற்றும் வளர்ச்சி கட்சி 80 சதவீத இடங்களை கைப்பற்றியது. தேர்தலில் எதிர்க்கட்சிகள் கிடையாது.

முக்கிய எதிர்க்கட்சி தலைவராக செயல்பட்ட நோபல் பரிசு பெற்ற ஆங்சான்சூகி அப்போது சிறையில் இருந்தார். தேர்தலுக்கு பின்னரே வீட்டுக்காவலில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். இந்நிலையில் 22 ஆண்டுகளுக்கு பின்னர் நாடாளுமன்றம் கூடும் என்று இராணுவ ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர். இது குறித்து அந்நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## பிரிஸ்பேனில் மக்கள் தவிப்பு வீடுகளை விட்டு வெளியேறினர்

(பிரிஸ்பேன்)

அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாகாணத்தில் ஒரு மாதத்திற்கும் மேலாகப் பெய்து வரும் கனமழையால் பல ஆறுகளிலும் பெருகி வரும் வெள்ளம் தற்போது தென் பகுதியிலும் பரவ ஆரம்பித்து விட்டது. இதனால் மாகாண தலைநகர் பிரிஸ்பேனில் உள்ள மக்களை உடனடியாக வீடுகளைக் விட்டு இடம்பெயருமாறு பொலிஸார் உத்தர விட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள குயின்ஸ்லாந்து மாகாணம் கடந்த 45 நாட்களுக்கும் மேலாக வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகிறது.

வரலாறு காணாத இந்த வெள்ளத்தால் அதன் வடபகுதியில் உள்ள ராகஹேம்ப்டன் நகர், புனித ஜார்ஜ் நகர் மற்றும் டூவூம்பா நகர் ஆகியவை வெள்ளத்தில் மூழ்கின. இதனால் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிப்படைந்தனர்.

டூவூம்பாவில் மட்டும் ஒன்பது பேர் பலியாகினர். 70 பேர் காணாமல் போய்விட்டனர். மாகாணத் தலைநகர் பிரிஸ்பேனில் இருந்து சற்று மேற்கில் அமைந்துள்ள டூவூம்பா நகரில் எதிர்பாராமல் தொடர்ந்து 36 மணி நேரம் விடாமல் கொட்டித் தீர்ந்த கன மழையால் அருகில் இருந்த ஆறுகளில் நீர் மட்டம் உயர்ந்து வெள்ளம் நகருக்குள் புகுந்தது.

இது குறித்து எவ்வித எச்சரிக்கையும் வராததால் மக்கள் கடைசி நேரத்தில் நீர்மட்டம் நகருக்குள் புகுவதைக் கண்டு உயிருக்குப் பயந்து மரங்களிலும் கார்கள் மற்றும் கட்டடங்களின் மேற்பரப்புகளிலும் ஏறி உயிர்தப்பிக்க முயன்றனர்.

இந்நிலையிலே பிரிஸ்பேன் அருகில் உள்ள ஆறுகளில் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருவதால் இன்று பெரும் வெள்ளம் நகரின் பல பகுதிகளுக்குள் புகலாம் என்று வானிலை ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதனால் வீடுகளுக்குள் வெள்ள நீர் புகாமல் இருக்க அனைத்து வீடுகளுக்கும் மணற் பைகள் அளிக்கப்பட்டுள்ளன. இருப்பினும்



நகரின் ஒரு பகுதியில் உள்ள 6 ஆயிரத்து 500 வீடுகள் தொழிலகங்கள் மற்றும் பிற இடங்கள் வெள்ளத்தால் மூழ்கடிக்கப்படலாம் என்று பிரிஸ்பேன் நகர மேயர் கேம்ப்பெல் நியூமேன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் இன்று பரவாயில்லை. நாளை மோசமாகும். நாளை மறுநாள் பேரழிவு நிகழக் கூடும் என்று கூறியுள்ளார். பிரிஸ்பேன் புறநகர்ப் பகுதியான இந்தூரூப்பிலி என்ற இடத்தில் வசிக்கும் ஜியோ வூ என்பவர் கூறிகையில் , இந்தப் பகுதி தற்போது ஆபத்தில் சிக்கியிருக்கிறது.

நான் இப்போதுதான் சந்தைக்குச் சென்றேன். சந்தையே வெள்ளத்தில் மூழ்கி விட்டது. அங்கிருந்தவர்கள் பீதியில் உறைந்து போய்விட்டனர். கடைகள் மூடப்பட்டு விட்டன. புகையிரதப் போக்குவரத்து நிறுத்தப்பட்டு விட்டது என்றார். (ஸ்ரீ-2)

## அமெரிக்க சவுத் கரோலினா மாநில ஆளுநராக இந்தியப் பெண் நியமனம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் சவுத் கரோலினா மாநிலத்தின் முதல் பெண் ஆளுநராக இந்தியர் நிக்கி ஹலே நேற்று பொறுப்பேற்று வரலாற்று சாதனை படைத்துள்ளார். பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த சீக்கிய பெண் நிக்கிஹலே (வயது 38) என்பவர் அமெரிக்க எதிர்க் கட்சியான குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர்.

சவுத் கரோலினா மாநிலத்தின் ஆளுநர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார் நிக்கி. அதன் மூலம் சவுத் கரோலினா மாநிலத்தின் முதல் பெண் ஆளுநராக நேற்று பதவி ஏற்றார்.

அந்த மாநிலத்தில் இதுவரை வெள்ளையினத்தைச் சேராத எவரும் ஆளுநரானதில்லை. பெண்களும் ஆளுநர் பொறுப் பேற்றதில்லை. இந்தியரான நிக்கி அந்த இரண்டு சாதனைகளையும் முறியடித்துள்ளார். (ஸ்ரீ-2)




## இளைஞரின் மூக்கில் பாய்ந்த குண்டு தும்மலில் வெளியேறிய அதிசயம்

இளைஞர் ஒருவரின் மூக்கில் பாய்ந்த துப்பாக்கி குண்டு அவர் இட்ட தும்மலால் வெளியேறிய அதிசய சம்பவம் இத்தாலியில் நடந்துள்ளது. இத்தாலியைச் சேர்ந்த டார்க்கோ சாஞ்சர்மனோ (வயது 28) என்ற இளைஞர் தன் காதலியுடன் புத்தாண்டு கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காக நேப்பிள்ஸ் சென்றார். இந்த நகரம் ரவுடிகளுக்குப் பெயர் பெற்றது. அப்போது எங்கிருந்தோ பாய்ந்து வந்த துப்பாக்கி குண்டு ஒன்று அவரது கன்னண் உரசிக் கொண்டு கன்னம் வழியாக மூக்கின் ஒரு பாதையில் அடைத்துக் கொண்டு நின்று விட்டது. இதனால் டார்க்கோவுக்கு இரத்துப் போக்கு அதிகளவில் ஏற்பட்டது. அவர் உடனடியாக மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டார். டாக்டர்களுக்காக அவர் காத்திருந்த போது தும்மல் போட்டார் அந்த தும்மலில் மூக்கின் பாதையில் நின்ற குண்டு மூக்கின் வலது துளை வழியாக வெளியே வந்து விழுந்தது.

பின்னர் அவரது கண்ணில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு துப்பாக்கி குண்டின் சிதறல்கள் அகற்றப்பட்டன. இந்த அறுவை சிகிச்சை பல மணிநேரம் நடந்தது. எனினும் டார்க்கோவின் கண் பார்வை பாதிக்கப்படாது. சிறிது காலத்திற்கு பார்வை மங்கி இருக்கும் என்று டாக்டர்கள் தெரிவித்தனர். இன்னும் சில வாரங்களில் அவரது விழித்திரையில் லேசர் மூலம் அறுவை சிகிச்சை நடக்க இருக்கிறது. அதன் மூலம் அவரது கண் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பிவிடும். (ஸ்ரீ-2)

## சூரிய குடும்பத்துக்கு வெளியே பூமி போன்ற புதிய கிரகம்

### நாசா விஞ்ஞானிகள் தகவல்



விண்வெளியில் கிரகங்களை ஆய்வு செய்வதற்காக அமெரிக்காவில் நாசா விஞ்ஞானிகள் கெப்லர் -10 என்ற செயற்கை கோளை விண்ணில் செலுத்தியுள்ளனர்.

அதில் பொருத்தப்பட்டுள்ள சக்தி வாய்ந்த தொலைக்காட்டி விண்வெளியில் உள்ள கிரகங்களை புகைப்படம் எடுத்து பூமிக்கு அனுப்பி வருகிறது. சமீபத்தில் கெப்லர் -10 செயற்கை கோள் ஒரு புதிய கிரகம் இருப்பதை கண்டுபிடித்து அனுப்பியுள்ளது. அது சூரிய குடும்பத்தை விட்டு வெளியே உள்ளது.

பூமியை போன்று தோற்றம் கொண்டது. இது முழுவதும் பாறைகளால் ஆனது. அது நட்சத்திர கூட்டங்களை சுற்றி வருகிறது. இந்த கிரகத்துக்கு கெப்லர்-10 பி என்று பெயரிடப்பட்டுள்ளது. இங்கு கடுமையான வெப்பம் நிலவுகிறது. அதாவது 1371 டிகிரி செண்டி கிரேடுக்கு மேல் வெப்பம் உள்ளது. எனவே இங்கு மனிதர்கள் வாழ முடியாது. எனவே தான் இது உயிரினங்கள் வாழ தகுதியற்றது.

இந்தத் தகவலை நாசா விஞ்ஞானிகள் நாசா விண்வெளி நிறுவனத்தின் கெப்லர் திட்ட விஞ்ஞானி டக்ளஸ் ஹட்ஜின் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த கிரகத்தில் காபன் உள்ளிட்ட இரசாயன பொருட்கள் இல்லை. எனவே இங்கு ஆர்.என்.ஏ.மற்றும் டி.என்.ஏ. மூலக்கூறுகள் தோன்ற வாய்ப்பு இல்லை. ஆகவே பூமியை போன்று இங்கு உயிரினங்கள் வாழ முடியாது என்று நாசாவின் மற்றொரு விஞ்ஞானி நடாலி படால்கா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மைக்கேல் ஜாக்சன் கொலை செய்யப்பட்டார் பிரேத பரிசோதனை அதிகாரி தகவல்



புகழ்பெற்ற பொப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் கடந்த 2009 ஆம் ஆண்டு அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்சில் உள்ள அவரது வீட்டில் மரணம் அடைந்தார்.

அளவுக்கு அதிகமாக சக்தி வாய்ந்த மருந்து மாத்திரைகளை வழங்கப்பட்டதுதான் அவரது சாவுக்கு காரணம் என குடும்ப டாக்டர் முர்ரே மீது புகார் கூறப்பட்டது. இதை தொடர்ந்து அவர் மீதும் கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணை அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள உயர் நீதிமன்றில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கு விசாரணை நீதிபதி மைக்கேல் பாஸ்டார் முன்னிலையில் நடந்தது.

அப்போது மைக்கேல் ஜாக்சனின் உடலை பிரேத பரிசோதனை செய்த தலைமை அதிகாரி கிறிஸ்டோபர் ரோஜர்சிடம் டாக்டர் முர்ரேயின் சட்டத்தரணி மைக்கேல் பிளானாகன் குறுக்கு விசாரணை செய்தார். அப்போது மைக்கேல் ஜாக்சனின் இரத்தத்தில் அளவுக்கு அதிகமாக மருந்தின் தாக்கம் இருந்தது.

அதுவே அவரது மரணத்துக்கு காரணம் ஆனது. இது அவர் கொலை செய்யப்பட்டார் என்றே கருத தோன்றுகிறது. டாக்டர் முர்ரேயின் சட்டத்தரணி பிளானாகன் வாதாடும் போது கூறுகையில், மைக்கேல் ஜாக்சன் இறக்கும் தறுவாயில் டாக்டர் முர்ரே அங்கு இல்லை. அவருக்கு மருந்து மாத்திரைகளை முர்ரே வழங்கவில்லை. அவற்றை ஜாக்சனே எடுத்து கொண்டார். எனவே அவரது மரணத்துக்கு டாக்டர் முர்ரே காரணம் இல்லை என்றார். (ஸ்ரீ-2)



அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரொபர்ட் கேட்ஸ் சீன ஜனாதிபதி ஹூ ஜிண்டாவோவைச் சந்தித்துக் கைலாகு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள சட்டம் பற்றிய அறிவு அவசியமாகும்

## வட-கிழக்கு மாகாண ஓய்வுபெற்ற காணி ஆணையாளர் தெரிவிப்பு

எமது சட்டரீதியான உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நாட்டின் சட்டம் பற்றி சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என வடக்கு- கிழக்கு மாகாண ஓய்வுபெற்ற காணி ஆணையாளர் க.குருநாதன் தெரிவித்துள்ளார்.

தியாகி அறக்கொடை நிலையத்தில் நேற்று யாழ்ப்பாணம் சிந்தனைக்கூட்டம் அமைப்பின் ஏற்பாட்டில் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற " காணி உரிமைகளும் அவை எதிர்நோக்கும் பிரச்சினைகள்" என்னும் தலைப்பிலான கருப்பொருளில் மக்களுடனான கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைப் பிரஜை என்பதை உறுதிப்படுத்த தேசிய அடைய ாள அட்டை எவ்வளவு முக்கியமோ அதேபோல் காணியில் வசிப்பதற்கு காணி உரிமப்பத்திரம் அவசியமாகும்.

இலங்கை அரசியலமைப்பு உறுப்புரை 3இன்படி இலங்கையின் இறைமை மக்களிடம் உள்ளது. அதன்படி இயற்கை வளங்களின் உரிமையும் மக்களிடம் உள்ளது.

இவற்றை அரசாங்கம் கொண்டிருப்பது நம்பிக்கைப் பொறுப்பாக மட்டுமே. பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பு காணிகள் மீதுள்ள மணல், நீர், கனிப்பொருட்கள் மற்றும் விலங்குகள் உட்பட இயற்கை வளங்கள் இந் நம்பிக்கைப் பொறுப்பிற்கு ஏற்புடையது.

இதனால் காடுகள், கடற்கரைகள் மற்றும் விசேட தன்மையுடைய ஏதேனும் காணிகளை அரசாங்கம் நம்பிக்கைப் பொறுப்பில் வைத்துள்ளது.இலங்கையில் இத்தகைய வளங்கள் ஜனாதிபதி, அமைச்சரவை, மாகாண சபைகள், உள்ளூரதிகார சபைகள், நியதிச் சட்ட சபைகள் என்பன பகிரங்க அலுவலர்களின் வழியாக கண்காணிக்கப்படுகின்றன.

இத்தகைய வளங்களை அல்லது காணிகளை தனியார் கையாள்வதற்கு மேற்குறிப்பிட்ட அமைப்பு அல்லது அலுவலர்களுக்கோ உரிமை கிடையாது.

மாநாடு நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

பிரச்சினை தொடர்பில் நோக்கும்போது அரசுக்கென ஒதுக்கப்பட்ட காணிகளை ஆட்சி உறுதிஎழுத முடியாது. அவ்வாறு இருந்தும் உறுதி எழுத்தாளர் உறுதி முடித்துக் கொடுப்பாராயின் அவருக்கு சிறைத் தண்டனையும் 5000 ரூபா தண்டப் பணமும் விதிக்கப்படும்.

ஆனால் தனியாருக்குச் சொந்தமான காணியினை அரசாங்கம் சுவீகரிக்க முடியாது. அவ்வாறு அரசாங்கம் மேற்கொள்ளுமாயின் தனிநபரால் அரசிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க நாட்டுச் சட்டத்தில் இடமுண்டு.

காணி உரிமையாளரின் காணிப்பத்திரம் தொலைந்துவிட்டால் கிராம சேவையாளர் ஊடாக பிரதேசசெயலாளருக்கு கடிதம் ஒன்றினை அனுப்ப வேண்டும்.இதற்கு அப் பகுதிக்கான கிராமசேவையாளரும் பிரதேச செயலாளரும் சரியான வழிகாட்டவேண்டும். மக்களின் வரிப்பணத்தை சம்பளமாகப் பெறும் இவர்கள் மக்களின் பாதுகாவலர்கள், நீதிக்குப் புறம்பாக செயற்படும் பட்சத்தில் உறுப்புரை - 17ஆம் இலக்க சட்டத்தின்படி இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கமுடியும்.

இக் காணிக்கான உரிமையாளர் இறக்கின்றபோது அடுத்த உரிமையினை தனது மனைவிக்கு எழுதவேண்டும். அதைவிட வாழும் காலத்தில் தமது பிள்ளைகளுக்கு காணி எழுத முற்படும் பெற்றோர் தமக்கும் சிறுநிலத்தினை ஒதுக்கிய பின்பு அவர்களுக்கு காணி எழுதவேண்டும். இதுவே நியதியாகவும் இப் பெற்றோரின் எதிர்கால வாழ்விற்கு ஆரோக்கியமாகவும் அமையும்.

பொதுமகனின் காணிகளை அந் நாட்டின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரக்கேடு, சுற்றாடல்கேடு என்பவற்றைக் கருத்தில் கொண்டு அந்நாட்டின் அரசு சட்டப்படி சுவீக ரிப்பதற்கு உறுப்புரை -15 இன் படி அரசிற்கு அதிகாரமுண்டு.அதேவேளை இப்பாதிப்பிற்கு உட்படும் பொதுமகன் சுவீகரிக்கப்பட்ட காணிக்குக் காணி உரிமப் பத்திரம் இருந்தால் எழுத்து மூலம் அப்பிரதேச செயலருக்கு அறிவித்து அதற்குரிய வாடகைப்பணத்தைப் பெறமுடியும் என சட்டம்கூறுகிறது.

2008ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் வாழும் பிரஜைகளுக்கு காணி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதை நீங்கள் இதுவரை அறிந்திருக்க வாய்ப்பில்லை.இது தொடர்பாக உங்கள் பகுதி கிராமசேவையாளர்களை தொடர்புகொள்ள வேண்டும்.இலங்கையைப் பொறுத்தவரையில் அரச காணிகள் 80வீதமும் தனியார் காணிகள் 20வீதமுமாக உள்ளது. காணிகளை சுவீகரிப்பதற்காக வருடாவருடம் அரசு நிதியினை ஒதுக்கிவருகின்றது. ஒரு பொதுமகனின் காணியைப் பெறும்போது அப்பொதுமகனுக்கு தகுந்த வசதிகளை செய்து கொடுப்பதற்கே இந்நிதி ஒதுக்கப்படுகின்றது. இலங்கையினைப் பொறுத்தவரை காணி களுக்கான தட்டுப்பாடு அதிகம். கல்முனைப்பகுதியில் வயல் காணிகளை எடுத்து அதற்கு மண்ணிட்டு நிரப்பி வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அதேபோன்றே குடிநீர்ப் பிரச்சினையும் ஏற்படுகின்றது. இன்னும் ஐந்து வருடங்களில் உலகத்தின் தண்ணீர்தேவை 46மடங்காக அதிகரிக்கும் என ஆய்வில் தெரிய வந்துள்ளது.

உலகத்தின்போக்கில் பார்க்கின்றபோது மனிதர்கள் பலபிரச்சினைகளுக்கும் நோய்களுக்கு உள்ளாவதற்கான வாய்ப்புகள் அதிகம். நாம் இன்று உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு சட்டடத்தை சரியாகப் படிக்கவேண்டுமே தவிர தனியே செயற்பட்டு எதையும் செய்யமுடியாது . சட்டத்தை தெரிந்து கொண்டு நாம் எடுக்கும் அனைத்து முயற்சியும் வெற்றியளிக்கும் என அவர் தனது கருத்தமர்வில் தெரிவித்தார்.இக் கருத்தமர்வில் காணிசம்பந்தமான பிரச்சினைகளோடு மக்கள் வந்து தமது காணிப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கத்துடன் கேள்விகளை கேட்டு பயன்பெற்றனர். (ஸ்ரீ-4-6)

# கடற்றொழிலாளர்களது பிரச்சினைகள் தொடர்பில் உயர்மட்ட சந்திப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருகைதரவுள்ள நிலையில் தமது முக்கியமான கோரிக்கைகளை தெரியப்படுத் தும் நோக்குடன் யாழ்.மாவட்ட கடற்றொழில் சமாச முக்கியஸ்தர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

நேற்று காலை யாழ்ப்பாணத்திலுள்ள அமைச்சரின் பணிமனைக்கு வருகைதந்த சமாச பிரதிநிதிகள் தமது முக்கிய பிரச்சினைகளாக இந்திய ரோலர்களின் அத்துமீறல் மற்றும் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் உதவிக்கோரிக்கைகள் என்பவற்றைத் தெரியப்படுத்தியுள்ளனர். வடபகுதி கடற்பரப்பிற்குள் பெருமளவில் ஊடுருவும் இந்திய ரோலர்கள் காரணமாக கடல் வளம் பெருமளவு அழிக்கப்படுவதுடன் தமது மீன்பிடி வலைகள் அதிகளவில் நாசமாக்கப்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக வாழ்வாதார உதவிகள் கடற்றொழிலுக்கான இலகு கடன் வசதிகள் மற்றும் சந்தை வாய்ப்புக்கள் என்பவற்றையும் ஏற்படுத்தித் தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மேற்படி கோரிக்கைகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்திய அமைச்சர் உடனடியாகவே இந்திய - தமிழ்நாடு கடற்றொழில் சமாசத் தலைவருடன் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு ரோலர்களின் அத்துமீறல் குறித்த யாழ்.கடற்றொழிலாளர்களின் கவலையினைத் தெரியப்படுத்தியதுடன் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.மேலும் இப்பிரச்சினை தொடர்பாகவும் கடற்றொழிலாளர்களது வாழ்வாதார கோரிக் கைகள் தொடர்பாகவும் ஜனாதிபதி யாழ்ப் பாணம் வருகை தரவுள்ள நிலையில் நேரடி யாகவே ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்வதாகவும் உறுதியளித்தார்.

இது தொடர் பாக யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து கடற்றொழிலாளர் சமாச பிரதிநிதிகளுடனான சந்திப்பொன்றினை நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அமைச்சரின் யாழ்.பணிமனையில் மேற்கொள்வதென்றும் இணக்கம் காணப்பட்டுள்ளது. எனவே அனைத்து கடற்றொழில் சமாச பிரதிநிதிகளையும் அச்சமயம் வருகை தருமாறு சமாசத் தலைவர் எமிலியாம் பிள்ளை கேட்டுக்கொண்டுள்ளார்.

மற்றொருபுறம் குடாநாடு முழுவதிலும் தடைசெய்யப்பட்டுள்ள ரோலர் மீன்பிடியானது சில தேவைகளின் நிமித்தம் நடைமுறையில் இருந்தபோதிலும் இம் மாதத்துடன் முற்றாக முடிவிற்குக் கொண்டு வரப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ

# யுத்தம் காரணமாக கல்வியை இடைநிறுத்திய மாணவர்களின் கல்வியை மேம்படுத்த வேண்டும்

## அமைச்சர் திஸ்ஸ தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தால் கல்வியை பல மாணவர்கள் இடைநிறுத்தியுள்ளனர். அவர்களின் கல்வியை மேம்படுத்த வேண்டியது அவசியமானது என சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

சிறுவர் செயலகம் மற்றும் கேமாஸ் நிறுவனம் இணைந்து உருவாக்கிய யாழ். மாநகர சபையில் புதிய மாதிரி பாலர் பாடசாலைத் திறப்பு விழாவில் நேற்று முன் தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் பல அழிவுகளை ஏற்படுத்திய யுத்தம் நிறைவடைந்த சூழ்நிலையிலும் தற்போது பெய்துவரும் கனமழை காரணமாக நாட்டின் பல பாகங்களிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.இதனால் பல்லாயிரக் கணக்கான மக்கள் பாதிப்படைந்துள்ளதோடு இடம்பெயர்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நாட்டில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலைகளினால் பலர் பாதிக்கப்படுவது வழமையானதொன்றே.ஆனால் கல்வி என்பது ஒருவரின் உரிமை. அதை நாம் தடுத்து விடக்கூடாது.

எனவேதான் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்துள்ள மாணவர்களின் கல்வியை மேம்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றோம்.

சிறுவயதில் ஏற்படும் மனத்தாக்ககங்கள் மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையை பாதிப்படைய செய்துவிடும்.இளம் பிள்ளைகளின் மனங்களில் ஏற்படும் சிறு கோபதாபங்களை ஆசிரியர்கள் கண்



காணித்து அவற்றினை நிவர்த்தி செய்வதோடு மாணவர்களின் எதிர்காலம் சிறப்புற அமைய ஆசிரியர்கள் அக்கறையுடன் பணிபுரிய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும்முன்பள்ளி மாணவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள இந்தப் பாடசாலைக்கு கேமாஸ் நிறுவனம் நிதியுதவி வழங்கியுள்ளது.

வர்த்தக நிறுவனமான இது மாணவர்களின் கல்விக்கு உதவுவது பெருமகிழ்ச்சியடைகின்றது.

வர்த்தகர்கள் சேர்க்கும் சொத்தை வங்கியில் சேர்த்து வைப்பது வழக்கமான தொன்று. அதனால் எந்தவிதப் பயனும் இல்லை. ஏழைக்குழந்தைகளின் கல்விக்கு உதவுவதே சிறப்பானது. அதுவே தர்மமும் கூட என அவர் தெரிவித்தார்.

நாட்டில் பல பாடசாலைகள் இருந்தாலும் அவற்றின் செயற்பாட்டின் குறைவால் சில வளர்ச்சி அடையாமல் உள்ளது. எனவே அந்தப் பாடசாலைகளிற்கு உதாரணமாக இந்த முன்பள்ளி செயற்பட வேண்டும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-6-51)

# இலங்கைக்கு சுற்றுலா மேற்கொள்ள இந்தியர்கள் அதிக ஆர்வம்

(கொழும்பு)

இலங்கையின் சுற்றுலாத் தொழில் மீண்டும் எழுச்சி பெற்றுள்ளது. சுற்றுலாப் பயணிகளில் இந்தியர்களின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கத்தீவு என்று ஒரு காலத்தில் இலங்கை அறியப்பட்டது. இலங்கை வருமானத்தின் பெரும் பங்கை சுற்றுலாத் துறையே வழங்கி வந்தது. ஆனால் கடந்த பல ஆண்டுகளாக தமிழர் பிரச்சினையால் இருந்து வந்த சூழ்நிலை இந்[illegible] துறையை தொய்வு அடையச் செய்[illegible]து. 2009 ஆம் ஆண்டு மே மாதம் [illegible]லப்புலிகள் பிரச்சினை கட்டுப்பாட்டுக்[illegible]தபின் மீண்டும் சுற்றுலாப் பயணி[illegible] தொடங்கியுள்ளனர்.

[illegible]லும் குறிப்பாக சுற்றுலா வர்த்தகத்தி[illegible] இலங்கைக்கு கிட்டும் வருமானத்[illegible]ரும்பகுதி இந்தியப் பயணிகளிடமிருந்தே வருகிறது. கடந்த ஆண்டு இலங்கைக்கு வந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 6 இலட்சத்து 54 ஆயிரத்து 476 ஆகும்.

இதில் ஒரு இலட்சத்து 26 ஆயிரத்து 882 பேர் இந்தியர்கள். இவர்களுக்கு அடுத்த படியாக இங்கிலாந்தைச் சேர்ந்தவர்களே அதிகம் இலங்கையைச் சுற்றிப் பார்க்க வந்துள்ளனர்.இங்கிலாந்து சுற்றுப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 496 ஆகும்.

கடந்த 2009 ஆம் ஆண்டு இலங்கை வந்த பயணிகள் எண்ணிக்கை 4இலட்சத்து 47ஆயிரத்து 890ஆக இருந்தது. இதில் 83ஆயிரத்து 634 பேர் இந்தியர்கள். 81 ஆயிரத்து 594 பேர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள். 2009 ஆம் ஆண்டை விட 2010 ஆம் ஆண்டு 46.1 சதவீதம் அதிக பயணிகள் இலங்கை வந்துள்ளனர். (ஸ்ரீ-2)

வானமும் நன்றே. பூமியும் நன்றே. ஆனால் அவற்றின் இடையேயுள்ள அந்த ஒன்றுதான் கெட்டது.

*– ஸ்பானியப் பழமொழி*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இயற்கையின் சீற்றத்திற்கு அர்த்தம் உண்டென உணர்க!

சூரியனை கண்கண்ட கடவுளாக வழிபடும் மரபு இந்து சமயத்திற்கு உரியது. அதனால் சூரிய பகவான் என்று கதிரவனை போற்றித் துதிக்கின்றோம்.

சூரியனைச் சாட்சியாக வைத்து காரியங்கள் செய்வதும் பிதிர்கடனிற்கான கடமைகளை நிறைவேற்றும் போது பிதிர்களிற்கான தர்ப்பணத்தை அவர்களிடம் சேர்க்குமாறு சூரியனை வேண்டுவதுமான மரபு இந்துக்களினுடையது.

நிஜத்தில் சூரியஒளி, மழை என்பன பயிர் விளைதற்கு இன்றியமையாதவை என்பதன் அடிப்படையில் சூரிய வழிபாட்டை சகல மதங்களும் ஏற்றுக்கொள்ளத் தலைப்பட்டன.

வேளாண்மை செய் விவசாயிகள் தங்கள் உழவுப் பணிக்கு உறுதுணையாக இருந்த சூரியனுக்கு நன்றி செலுத்தும் முகமாக, தை மாதப்பிறப்பில் பொங்கல் செய்து முக்கனிகள் படைத்து வழிபடுகின்றனர். அதனால் தைப்பொங்கல் சிறப்புப் பெறுகின்றது.

அதேசமயம் இந்த ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலோடு தைப்பொங்கல் வருவதனால் அது அரசியல் பொங்கலாகவும் எழுச்சி பெறுகின்றது.

எனினும் கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் ஏனைய இடங்களில் வெள்ளம் பொங்குகின்றது. ஆறு பெருக்கெடுக்கிறது. மண் சரிகின்றது. மக்கள் அவலம் தாங்கமுடியாமல் தவிக்கின்றனர்.

இயற்கையின் சீற்றம் தணிவதாக இல்லை. ஏன் இப்படி? இந்தக் கேள்விக்கு பலர் பல விளக்கங்களைத் தரலாம்.

தாழமுக்கம் காரணமாகவே கடும் மழை என்பது வானிலை ஆராய்ச்சி மையத்தின் அறிவிப்பாக இருக்கும். சோதிடர்களோ இந்த ஆண்டில் மழை வீழ்ச்சி, வெள்ளப்பெருக்கு என பஞ்சாங்கம் பகர்கிறது என்று சொல்வார்கள்.

ஆனால் பொதுநிலை நின்று எங்கள் முன்னோர்களின் அனுபவங்களை ஆராய்ந்தால்,

நீதி பிழைக்கும்போதும், அதர்மம் எழுச்சி பெறும் போதும் இயற்கை சீற்றம் கொள்ளும். பஞ்சம், பசி, பிணி தலைவிரித்தாடும், அமைதி குலையும், அழிவுகள் மலியும் என்றே கருதப்படுகின்றது. ஆகையால் எங்கோ மாபாவம் நடக்கின்றது.

அதனால் இயற்கை ஆவேசம் கொண்டுவிட்டது. அண்மைக்காலமாக இயற்கையின் மாற்றங்களைப் பார்க்கும்போது எதிர்காலத்தில் நிலைமை படுமோசமாக மாறும்போல் தெரிகின்றது.

இயற்கை ஒரு நிமிடம் சீற்றம் கொண்டாலே போதும் எங்கள் ஆணவம், ஆயுள், தேட்டம் அத்தனையும் அழிந்துவிடும்.

ஆகையால் நாங்கள் வாழும் இயற்கைக்கு அமைவாக தர்மத்தின் வழியில் வாழ்வு அமையட்டும்.

சூரியனுக்கு பொங்கிப் படைப்பதில் அர்த்தம் இருக்கும் என யாரேனும் கருதினால் இயற்கையின் சீற்றத்திற்கும் அர்த்தம் உண்டென உணர்க.

# யாழ்.மத்திய கல்லூரியில் 15ந் திகதி தைப்பொங்கல் கலாசார விழா

## சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு, கலாசார அமைச்சு, வட மாகாணசபை, யாழ்.மாவட்டச் செயலகம், இந்து கலாசாரத் திணைக்களம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம், கல்வித்திணைக்களம் மற்றும் சமூக அமைப்புக்களின் அனுசரணையுடன் தைப்பொங்கல் கலாசாரவிழா எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி வளாகத்தில் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இவ் விழாவில் புனர்வாழ்வு ஆணையாளர் பணியகம் ஊடாக புனர்வாழ்வு பெற்ற முன்னாள் புலிகள் இயக்கத்தின் இளைஞர் யுவதிகள் விடுவிக்கப்பட்டு அவர்களின் பெற்றோர், உறவினர்களுடன் இணைக்கப்படவுள்ளனர். புனர்வாழ்வு நிலையங்களிலிருந்து க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்றவர்களுக்கும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான 50 மாணவர்களுக்கும் தலா 5 ஆயிரம் ரூபாய் வீதம் புலமைப்பரிசில் வழங்கப்படுவதோடு, புனர்வாழ்வு அதிகாரசபையின் ஏற்பாட்டில் வீடமைப்புக் கடன் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு காசோலைகளும், விதவைப் பெண்களுக்கான சுயதொழில் கடன்தொகைகளும் வழங்கப்படவிருக்கின்றன. அத்துடன் தேசிய சேமிப்பு வங்கியின் ஊடாக 500 பாடசாலை மாணவர்களுக்கான சேமிப்பு வைப்பு ஆரம்பித்து அவர்களுக்கு கையளிக்கப்படவுள்ளதுடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈடுகளும் வழங்கப்படவிருக்கின்றன.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தலைமையில் நடைபெறும் விழாவிற்கு மனிதவள அபிவிருத்தி சிரேஷ்ட அமைச்சர் டீ.யூ.குணசேகர, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலாசார அமைச்சர் ரி.பி. ஏக்கநாயக்க, வட மாகாண ஆளுநர் ஜீ. ஏ.சந்திரசிறி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி பிரதிநிதிகள், அரச அதிகாரிகளும், பொதுமக்களும் கலந்துகொள்ளும் இக் கலாசார விழாவிற்கு இந்திய, இலங்கைப் பிரபல கலைஞர்களின் இசை, நடன, கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக புனர்வாழ்வு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் எம்.எஸ்.சதீஸ்குமார் தெரிவித்துள்ளார்.

(ந)

# யாழ்ப்பாண நகரின் மத்தியில் நவீன வர்த்தக நிலையத் தொகுதி

## அமைச்சர் டக்ளஸ் நேரில் சென்று ஆய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் அமையப் பெற்றுள்ள நவீன வர்த்தக நிலையத் தொகுதியை அமைப்பது தொடர்பில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நேற்று அப்பகுதிக்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளார்.

முன்னதாக கஸ்தூரியார் வீதியில் நகரக்குளத்திற்கு அண்மையாக அமைந்துள்ள வர்த்தக உரிமையாளர்களுடன் அமைச்சர் கலந்துரையாடினார். இதன்போது அமையப்பெறவுள்ள நவீன வர்த்தக நிலையத் தொகுதியில் முன்னுரிமை அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்து தரப்படும் எனவும் அதற்கு நாலுமாதகால அவகாசம் தேவை என்றும் புரிந்துணர்வுடன் ஒத்துழைப்பும், ஒத்தாசையும் வழங்கவேண்டும் என்றும் இவ்விடயம் தொடர்பில் யாழ்.மாநகர முதல்வரிடம் தொடர்புகொண்டு விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து அப் பகுதியில் அமையப்பெற்றுள்ள பாரவூர்தி, துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் தரிப்பிடங்களையும் பார்வையிட்ட அமைச்சர் நகரக் குளத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டார்.

அத்துடன் குறிப்பிட்ட வாகனங்களின் தரிப்பிடங்களை மாற்றுவது தொடர்பிலும் ஆராய்ந்துள்ளதுடன், மின்சார நிலைய வீதியில் மருத்துவமனைக்கு அருகிலுள்ள பொதுக் கிணற்றையும் அதன் வளாகத்தையும் அமைச்சர் பார்வையிட்டார்.

இதன்போது யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, சட்டத்தரணி ரங்கன் ஆகியோரும் உடன் இருந்தனர்.

(ந)

# புலம் பெயர்ந்துள்ள தமிழ் மக்கள் வெள்ள நிவாரணத்திற்கு உதவுக

## த.தே.ம.முன்னணி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்க முன்வருமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழ் மக்களின் தாயகப் பிரதேசங்களில் கடந்த பல வாரங்களாக தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக வன்னி, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மிக மோசமான பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 80 ஆயிரத்து 410 குடும்பங்களைச் சேர்ந்த 3 இலட்சத்து 6 ஆயிரத்து 998 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 24 ஆயிரத்து 300 பேர் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 980 குடும்பங்களைச் சேர்ந்த 4 இலட்சத்து 82 ஆயிரத்து 830 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 14 ஆயிரத்து 549 குடும்பங்களைச் சேர்ந்த 55 ஆயிரத்து 345 பேர் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். திருமலையில் 22 ஆயிரத்து 26 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர மனிதாபிமான உதவிகள் வழங்கவேண்டியுள்ளதால் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் வழங்க முன்வருமாறு வேண்டுகின்றோம். உதவி வழங்க விரும்புவோர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டுகின்றோம் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# சர்வவியாபகர் பகவான் பாபா

புட்டபர்த்தியிலிருந்து ஒரு சில மைல் முன்பாக பாகே பள்ளி என்னும் இடம் உண்டு. அங்கே பகவானின் அடியவர்கள், சேர்ந்து பகவானிடம் பிரசாந்தி நிலையம் செல்லும் பக்தர்களுக்கு தண்ணீர், உணவு என்பன வழங்கி உபசரித்தனர். அதேபோன்று திரும்பி வருபவர்களுக்கும் அவ்வாறே உபசரித்தனர். இதனால் இதற்கு 'அன் பின் குடிசை' என்று பெயரிட்டனர். இக் குடிசைக்கு முன்பாக சர்வமதங்களின் முக்கியத்து வங்களும் அமையப்பெற்ற தூபியும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

1986 ஆம் ஆண்டு இக்குடிசை ஸ்தாபிக்கப்பட்டது. சில காலங்களுக்கு பின்பு சத்திய சாயிசேவா ஆச்சிரமம் என்று பெயர் சூடப்பட்டது. இவ்வாறு தியாக மனப்பான்மையுடன் இவ் ஆச்சிரமம் இயங்கி வந்ததால் பகவான் சாயி அடிக்கடி இவ்வாச்சிரமத்திற்கு விஜயம் செய்து வந்ததுடன், தனது நிறைந்த ஆசியையும் வழங்கி வந்தார்.

இதனால் மனம் உந்தப் பெற்ற பகவான் அடியவர்கள் மேலும் உற்சாகத்தோடு அநாதைக் குழந்தைகள் இல்லம், வயோதிபர் இல்லம், தொண்டர் இல்லம் எனப் பல வகையான சேவை நிலையங்களையும் பெருக்கி மிக உற்சாகத்தோடு சேவையாற்றி வந்தனர்.

ஒருமுறை புகழ்பெற்ற சினிமா நடிகை அஞ்சலிதேவி, அதேபோன்று புகழ்பெற்ற பாடகி சுசீலா ஆகியோர் பகவானைத் தரிசிக்கும் பொருட்டு புட்டபர்த்தி நோக்கி பயணமானார்கள். அவ்வேளை சத்யசாயி சேவா ஆச்சிரமத்தின் ஊடாக பயணித்த போது ஆச்சிரம சேவையிலுள்ளவர்கள் இவர்களிடம் உணவருந்தி, களைப்பாறிச் செல்லுமாறு அன்புடன் வேண்டினர். ஆனால், புகழ்பெற்ற சீமாட்டிகளுக்கு இந்த நல்ல சேவை ஏற்புடையதாக, அமையாததாக தோன்றியது. இவர்களும்சினிமாரசிகர்களேஎன்றுநினைத்து தமது பயணத்தை தொடர்ந்தனர்.



பிரசாந்தி நிலையத்தில் பகவானுடன் சம்பாஷிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்போதுசுவாமி, 'நான் பிரசாந்தி நிலையத்தில் மட்டுமல்ல பாகே பள்ளி சேவா ஆச்சிரமத்திலும் இருக்கிறேன். இப்பிரபஞ்சம் முழுவதும் வியாபித்துள்ளேன் என்றார். அப்போது அவ்விருவரும் தம் தவறை உணர்ந்து திரும்பி வரும் வழியில் அவ்வாச்சிரமத்தில் தரித்து நின்று அவ்வடியவர்களிடம் மன்னிப்பு கேட்டதுடன் அவர்கள் வழங்கிய பிரசாதத்தை ஏற்றுக்கொண்டு பயணத்தைத் தொடர்ந்தனர்.

ஜெய் சாய்ராம் யாதவன்

# யுத்தத்தால் பலர் பார்வையற்றோராகவும் அங்கவீனர்களாகவும் ஆக்கப்பட்டுள்ளனர்

## யாழ். விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

யுத்த காலத்தில் பலர் பார்வையற்றவர்களாகவும் அங்கவீனர்களாகவும் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களின் எதிர்கால வாழ்வை முன்னேற்றுவதற்கு அனைவரும் முன்வர வேண்டும் என யாழ். விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் ஆ. மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற விழிப்புலனற்றோர்களுக்கான பேருந்து கையளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தினரின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. பார்வையற்றவர்கள் பயணம் செய்வதில் பல இடர்பாடுகளை எதிர்கொண்டனர். அத்தகைய நிலை தற்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

20 இலட்சம் ரூபா பெறுமதியான பேருந்து ஒன்றை கந்தையா சுசிந்திரன் என்பவர் எமது சங்கத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளார். அவருக்கு எமது சங்கத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் பார்வையற்றவர்கள் சமூகத்தினரின் பார்வையில் தன்னம்பிக்கையற்றவர்களாகவும் இயலாமையுள்ளவர்களாகவும் கருதப் படுதின்றனர். அவர்கள் எந்த நேரமும் நடமாடுவதற்கு மற்றவர்களின் துணையை நாடுகின்றனர்.

இவ்வாறு பார்வையற்றவர்களுக்கு தன்னம்பிக்கையளிக்கும் வகையில்தான் வெள்ளைப் பிரம்பு பயிற்சியளித்து வருகின்றோம். இதன் நோக்கம் பார்வையற்றவர்கள் எவர் மீதும் தமது தேவைகருதி பிறர்மீது தங்கி இருக்கக் கூடாது என்பதாகும். அத்தோடு விழிப்புலனற்றோர் தொழிற்துறையில் முன்னேறும் வகையாக தொழில் மேற்கொள்ள ஊக்குவிப்பு பணம் வழங்கி அவர்களின் தொழி வளர்ச்சியை முன்னேற்றி வருகின்றோம். இதற்கு சில நிறுவனங்கள் எமக்கு உதவி வருகின்றன.

மேலும் கல்வியிலும் சிறந்து விளங்க கணனி பயிற்சி நெறி மற்றும் உயர்கல்வி போன்றவற்றுக்கு உதவிகள் வழங்கியுள்ளோம். இதற்கென கைதடியில் தொழிற் பூங்கா என்ற நிறுவனம் இயங்கி வருகின்றது. இதில் பார்வையற்றவர்கள் கோழிவளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)

## சங்குப்பிட்டிப் பாலம் அடுத்த மாதம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

பூநகரியையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் சங்குப்பிட்டிப்பாலம் அடுத்த மாத இறுதியில் பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்படவுள்ளது.

288 மீற்றர் நீளம் கொண்ட இந்தப் பாலத்தின் கட்டுமானப்பணிகளுக்காக 80 கோடி ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-9)

## வயாவிளான் பகுதியில் வாக்காளருக்கான பதிவுகள்

### அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் இடம்பெயர்ந்துள்ள நிலையில் தேர்தல் இடாப்பில் பெயர் பதியப் படாமலும் பதிவு தவறவிடப்பட்ட நிலையிலும் காணப்படும் தமது பதிவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு வயாவிளான் மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திலுள்ள அமைச்சரின் பணிமனைக்கு வருகை தந்த வயாவிளான் மக்கள் பிரதிநிதிகளே மேற்கண்ட கோரிக்கையினை விடுத்தனர்.

ஜே/245 கிராம அலுவலர் பிரிவினைச் சொந்த இடமாகக் கொண்ட இப்பிரதேச மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் பல வருடங்களாக பல்வேறு இடங்களிலும் வசித்து வருவதுடன் கடந்த வாக்களர் இடாப்பு பதிவின் போது உரிய தகவல்கள் கிடைக்காமல் பதிவினை புதுப்பிக்க பலர் தவறியுள்ளதாகவும் மேலும் புதிதாக வாக்காளர் பதிவில் இணைத்துக் கொள்ள அடுத்த ஓர் தலைமுறை உருவாகியுள்ளதாகவும் தெரியப்படுத்தினர்.

இவ்வாறான சுமார் 800 பேர் உள்ளதாகவும் எனவே உரிய நடவடிக்கை மேற்கொண்டு வாக்காளர் இடாப்பில் பதிவினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தனர்.

மேற்படி வேண்டுகோள் தொடர்பாக கவனம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். உதவித் தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் ஆகியோருடன் உடனடியாக தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற் கொண்டார். இதன் பிரகாரம் எதிர்வரும் 19 ஆம் [illegible] வயாவிளான் மகாவித்தியாலயத்தில் ஓர் நடமாடும் சேவையினை மேற் கொண்டு தவறவிடப்பட்ட மற்றும் பதியப்படாத வாக்காளர்களின் பதிவினை மேற்கொள்வதென முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமது வேண்டுகோளை ஏற்று தமது வாக்காளர் இடாப்பு பதிவினை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டு வந்தமைக்காக வயாவிளான் மக்கள் பிரதிநிதிகள் தமது நன்றிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தெரிவித்துக் கொண்டனர். (ஸ்ரீ)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐ.நா உதவி

இலங்கையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களில் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபை முன் வந்துள்ளது.

இதன் அடிப்படையில் பாதிக்கப்பட்ட இடங்கள் தொடர்பில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் பேச்சாளரான மார்ட்டின் நெசக்கி தெரிவித்துள்ளார்.

ஆரம்பிக்கப்பட்ட ஆய்வின்படி பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உணவு, உணவு அல்லாத பொருட்கள் நீர் போன்ற பொருட்கள் அவசியம் என அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கையிலுள்ள குழு இலங்கையிலுள்ள அனர்த்த முகாமைத்துவ குழுவுடன் இணைந்து பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் ஆய்வுகளை மேற் கொண்டுள்ளது. இதனடிப்படையில் எதிர்வரும் சில தினங்களுக்கு தேவையான பொருட்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு விநியோகிக்கப்படும் எனவும் நெசக்கி குறிப்பிட்டுள்ளார்.

உலக உணவுத்திட்டம் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம், உலக சுகாதார ஸ்தாபனம் என்பன தற்போது நிவாரண பணிகளில் ஈடுபடுகின்றன.

இந்த நிலையில் மனிதாபிமான விவகாரத்தித்துக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகம் தகவல் படி பாதிக்கப்பட்ட சுமார் 4 இலட்சம் மக்களுக்கான எழுநூற்றி 85 மெற்றிக் தொன் உணவு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தால் நீர்தாங்கிகளும் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவில் 3 ஆயிரத்து 500இற்கும் மேற்ப்பட்டோர் இடம்பெயர்ந்து பன்னிரண்டு முகாம்களில் தங்கியிருக்கின்றார்கள்.

நாவலப்பிட்டி பிரதேச சபைப்பிரிவில் 3ஆயிரத்து 300 இற்கும் மேற்பட்டோர் இடம் பெயர்ந்து 5 முகாம்களில் தங்கியிருக்கின்றனர்.

இதேவேளை வெள்ளத்தினால் அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவில் சுமார் 8 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 3 ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கின்றார்கள்.

(ஸ்ரீ-9)

## கிளி. மாவட்டத்தில் வீடமைப்பு கடன் வழங்குவதற்கான பதிவுகள்


கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலங்களில் வீடமைப்புக் கடனுக்காக பதிவுகளை மேற்கொண்டவர்கள் மீளவும் விண்ணப்பப் படிவங்கள் மூலம் தமது பதவியை மேற் கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகாரசபை மாவட்ட முகாமையாளர் மு. ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

தற்போது இவர்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறன. கடனுக்காக பதிவுகளை மேற் கொண்டவர்கள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மாவட்ட காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் இதற்கான பதிவுகளை மேற்கொள்ளாதவர்களும் இப்படிவத்திளை பெற்று பூர்த்தி [illegible] தருமாறு அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## இலவச கலை வகுப்புக்களுக்கான விண்ணப்பம் கோரல்

காரைநகர் கிழவன்காடு கலா மன்றத்தினால் இலவச கலை வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இவ் வகுப்புகளில் அறநெறி சமயம், பண்ணிசை, சங்கீதம், நடனம், மிருங்கம் , வயலின்,சித்திரம் ,மாலைகட்டுதல் , கோலம் போடுதல்,தோரணம் பின்னுதல் ஆகியவை நடைபெறவுள்ளது. எனவே இதில் ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பித்து பயனடையுமாறு கேட்கப்படுகின்றனர். (ஸ்ரீ-2)



தெல்லிப்பழை கிழக்கு கிராம அபிவிருத்தி அமைப்பு அலுவலக திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் மீள் எழுச்சித் திட்ட பிரதி திட்டப் பணிப்பாளர் எஸ். சுதர்சன் மங்கல விளக்கேற்றுவதையும் மீள் எழுச்சித் திட்ட முன்னாள் பிரதித் திட்டப் பணிப்பாளர் வி. விஸ்வலிங்கம் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- தெல்லிப்பழை செய்தியாளர்)

# இங்கிலாந்து அணி சாதனை வெற்றி; ஆஸி. அணியின் போராட்டம் வீண்



(அடிலெய்ட்)

முதலாவது இருபது-20 போட் டியில் இங்கிலாந்து அணி இறுதிப் பந்துவரை போராடி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தியது.

இதன்மூலம் இங்கிலாந்து அணி தொடர்ச்சியாக 8 இருபது-20 போட் டிகளில் வெற்றி பெற்று புதிய சாதனையை பதிவுசெய்தது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடர், 2 இருபது-20 போட்டிகள் மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் ஆஷஸ் டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 3:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்நிலையில் முதலாவது இரு பது-20 போட்டி நேற்று அடிலெய்ட்டில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 04 விக்கெட்டுக்களையிழந்து 157 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஷேன் வோட்ஷன் 31 பந் துகளில் (06 பவுண்டரிகள், 03 சிக்ஸர்கள் அடங்கலாக) 59 ஓட்டங்களையும் வோர்னர் 28 பந்துகளில் (05 பவுண்டரிகள் உட்பட) 30 ஓட்டங்களையும் டேவிட் ஹசி 28 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் யாட்டி 02 விக்கெட்டுக்களையும் வோக்ஸ், பிரேஷ்மன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 ஓவர்களில் 09 விக்கெட்டுக்களையிழந்து 158 ஓட்டங்களை குவித்து ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் மோர்கன் 33 பந்துக ளில் (05 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 43 ஓட்டங்களையும், பெல் 17 பந்துகளில் (04 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 27 ஓட்டங்களையும் பீற்றர்சன் 11 பந்துகளில் (03 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 25 ஓட்டங்களையும் வோக்ஸ் ஆட்டமிழக்காமல் 15 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 19 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் ஷேன் வோட்ஷன் 04 ஓவர்கள் பந்துவீசி 15 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து ஹட்ரிக் சாதனையுடன் 04 விக்கெட்டுக்களையும் ரைட், பிரெட் லீ, ஜோன்சன், ஒகீபி, டேவிட் ஹசி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் சகலதுறையிலும் ஜொலித்த அவுஸ்திரேலிய அணியின் வோட்ஷன் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் இங்கி லாந்து அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இதேவேளை இருபது-20 கிரிக் கெட் அரங்கில் கடைசியாக 08 போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி புதிய சாதனையைப் பதிவுசெய்தது.


இதற்கு முன்னர் தென்னாபி ரிக்க அணி தொடர்ச்சியாக 07 போட்டிகளில் வெற்றி பெற்று இருபது-20 அரங்கில் சாதனையைப் பதிவு செய்திருந்தது.

இதனிடையே இருபது-20 உலக சம்பியன் இங்கிலாந்து அணி நேற்று இதை முறியடித்து புதிய சாதனை படைத்தது.

# பஞ்சாப் அணியின் தலைவர் கில்கிறிஸ்ட்

(புதுடில்லி)

நான்காவது ஐ.பி.எல்.தொடரில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியின் தலைவராக கில்கிறிஸ்ட் நியமிக்கப்பட்டுள்ளார். ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் கடந்த மூன்று ஆண்டுகளாக டெக்கான் சார்ஜஸ் அணியின் தலை வராக செயல்பட்டு வந்தவர் கில் கிறிஸ்ட். இவரது தலைமையில் டெக்கான் அணி கடந்த 2009 ஆம் ஆண்டு நடந்த இரண்டாவது ஐ.பி.எல். தொடரில் சம்பியனாகி சாதித் தது.



சமீபத்தில் நடந்த வீரர்கள் ஏலத்தில் கில்கிறிஸ்டை (ரூபாய் 11 கோடி) கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி வாங்கியது. இதனையடுத்து பஞ்சாப் அணி நிர்வாகம் கில்கிறிஸ்டை அணித்தலைவராக நியமித்துள்ளது.

அணியின் பயிற்சியாளராக அவுஸ்திரேலியாவின் மைக்கல் பெவன் உள்ளார்.

# கங்குலி எனது சகோதரர் ஷாருக்கான் மீண்டும் சமாதானம்

(புதுடில்லி)

கங்குலி எனது சகோதரர் போன்றவர். அவரை அணியில் எடுக்காதது எனது முடிபல்ல என கொல்கத்தா அணியின் உரிமையாளர் பாலிவூட் நடிகர் ஷாருக்கான் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா அணியில் விளையாடியவர் கங்குலி. முதல் மற்றும் மூன்றாவது தொடரில் அணித் தலைவராக செயல்பட்டார். இம்முறை நான்காவது தொடருக்கான ஏலத்தில் கங்குலியை யாரும் வாங்க முன்வரவில்லை. இது கொல்கத்தா இரசிகர்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.


இதையடுத்து கொல்கத்தா அணியில் கங்குலிக்கு தகுந்த இடம் தரப்படும் என்று ஷாருக்கான் கூறினார். தற்போது கங்குலி தேர்வுசெய்யப்படாததற்கும்தனக்கும்தொடர்பில்லை என்கிறார். இது குறித்து ஷாருக்கான் கூறியதாவது,

கடந்த மூன்று தொடர்களில் கொல்கத்தா அணி சிறப்பாகச் செயற்படவில்லை. இதனால் அடுத்த தொடரில் அசத்த வேண்டிய கட்டாயத்தில் கொல்கத்தா அணி உள்ளது. முதல் தொடரில் நான் எடுத்த முடிபுகள் வெற்றிபெறவில்லை. இதனால் முடிவெடுப்பதிலிருந்து விலகிவிட்டேன். அணி குறித்த முடிபுகளை கிரிக்கெட்டில் அனுபவம் வாய்ந்தவர்கள் எடுத்தனர்.

ஒரு சில முடிபுகளை எடுக்க கடினமான இதயம் இருக்கவேண்டும். கடந்த மூன்று தொடர்களில் சிறப்பாக விளையாடிய கங்குலியை தேர்வுசெய்யாதது எனது முடிபல்ல.

கொல்கத்தா அணி ஒரு சிலரை மட்டும் உரிமையாளராக கொண்டிருக்கவில்லை. இது இருபது பேர்கள் அடங்கிய குழுவாக செயற்படுகிறது. இவர்கள் தான் காம்பீரை ரூபாய் 11.4 கோடிக்கு ஏலம் எடுத்தனர். கங்குலி எனது சகோதரர் போன்றவர். அவரை அணியிலிருந்து இழந்தது மிகவும் வருத்தமாகவுள்ளது.

எங்களைப்பொறுத்தவரையில் கொல்கத்தா அணி சம்பியன் பட்டம் வெல்லவேண்டும் என்றுதான் விரும்புகின்றோம். கங்குலியும் இதைத்தான் விரும்புவார். இது போன்ற



மிகப் பெரிய இலக்கை அடையும்போது ஒரு சிலவற்றை தியாகம் செய்து சோகமான முடிபுகளை எதிர்கொள்ளத்தான் வேண்டி இருக்கும்.

முதல் தொடரில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன. மூன்றாவது தொடரின்போது பல சிக்கல்கள் வந்தது. நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் இம்முறையாவது கொல்கத்தா அணியை எந்தப் பிரச்சினையும் இல்லாமல் போட்டியில் பங்கேற்க அனுமதியுங்கள் என்பதுதான். இவ்வாறு ஷாருக்கான் கூறினார்.

# உலகக்கிண்ணத் தொடருக்குப் பின் ஓய்வு குறித்து சிந்திப்பேன்

## சமிந்த வாஸ் தெரிவிப்பு



உலகக்கிண்ணக் கிரிக்கட் தொடருக்குப் பின்னர் ஓய்வு குறித்து முடிபு எடுப்பதாக இலங்கை வீரர் சமிந்த வாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இலங்கை கிரிக்கெட் அணியின் மூத்த வேகப் பந்துவீச்சாளர் சமிந்த வாஸ் அளித்த ஒரு பேட்டியில்,

எனது சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சிக்கிறேன். ஆனால் உள்ளூர்ப் போட்டிகளில் எனது செயற்பாடு அணிக்குத் தேர்வாவதற்கு போதுமானதாக அமையவில்லை.

நான் இடம்பெறாவிட்டாலும் இலங்கை அணி உலகக்கிண்ணத்தை கைப்பெற்ற எனது வாழ்த்துக்கள். மீண்டும் உலகக்கிண்ணத்தை பெற்றுத் தருவார்கள் என்று நம்புகிறேன் என்றார்.

இன்னும் இரண்டு வாரங்களில் சமிந்த வாஸிற்கு 37வது வயது பிறக்கிறது. ஆனாலும் சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவது குறித்து இன்னும் இறுதி முடிபு எடுக்க வில்லை. உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடருக்குப் பின்னர் ஓய்வு குறித்து சிந்திப்பேன் என்று தெரிவித்தார்.

# பாகிஸ்தான் வீரர்களின் தீர்ப்பு ஒத்திவைப்பு



(தோகா)

பாகிஸ்தான் வீரர்களான சல்மான் பட், ஆமீர், ஆசிப் மீதான சூதாட்ட விசாரணையின் தீர்ப்பை சர்வதேச கிரிக்கெட் சபை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைத்துள்ளது.

கடந்த ஆண்டு லோர்ட்சில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் போது பாகிஸ்தான் வீரர்களான சல்மான் பட், முகமெட் ஆமீர், முகமெட் ஆசிப் ஆகியோர் ஸ்பாட் பிக்சிங் எனப்படும் சூதாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து இவர்கள் மூவரையும் கடந்த செப்டெம்பர் மாதம் ஐ.சி.சி. இடைநீக்கம் செய்தது. இவர்கள் மீதான சூதாட்டப் புகார்களை விசாரிக்க ஐ.சி.சி. சார்பில் 3நபர் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு கடந்த ஆறாம் திகதிமுதல் தோகாவில் விசாரணை நடத்தியது.

இதில் சல்மான் பட், ஆமீர், ஆசிப் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்த விசாரணை நேற்று முடிந்தது. ஆனால் தீர்ப்பை ஒத்திவைக்க வேண்டும் என முகமெட் ஆமீரின் வழக்கறிஞர் கரீம் வேண்டுகோள் விடுத்தார். இதனையடுத்து அடுத்த கட்ட விசாரணை அடுத்த மாதம் 5 ஆம் திகதி நடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# புதிய கடற்படைத் தளபதியாக ரியர் அட்மிரல் திஸாநாயக்க

(கொழும்பு)

கடற்படையின் பிரதம படை அதிகாரி ரியர் அட்மிரல் எஸ்.திஸாநாயக்க இம் மாதம் 15 ஆம் திகதி முதல் புதிய கடற்படைத் தளபதியாக நியமனம் பெறுவதாக படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

அதேவேளை தற்போதைய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் திஸார சமரசிங்க நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அட்மிரலாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதியுடன் இவரின் பதவிக்காலம் முடிபடையவுள்ள நிலையிலேயே புதிய கடற்படைத் தளபதியாக ரியர் அட்மிரல் எஸ்.திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை திஸார சமரசிங்க ஓய்வு பெற்ற பின்னர் அவுஸ்திரேலியாவுக்கான உயர்ஸ்தானிகராக நியமிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்திருந்தது.

2009ஆம் ஆண்டு யூலை மாதம் 15ஆம் திகதி கடற்படைத் தளபதியாக இவர் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# வெள்ளைக்கொடி விவகாரம் முன்னாள் நீதிபதி சாட்சியம்

(கொழும்பு)

சரத் பொன்சேகா மற்றும் வெள்ளைக் கொடி தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது முன்னாள் கொழும்பு பிரதம நீதிபதி சம்பாஜானகி ராஜரட்ண சாட்சியமளித்தார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுடனான பேட்டியின் குறிப்புகளை பிரெட்ரிகா ஜேன்ஸ் பதிவு செய்திருந்த குறிப்பு புத்தகத்தை கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் கையளிக்கப்பட்ட போது இருந்த மாதிரி இப்போது இல்லை என அவர் கூறினார். அதில் இரண்டு பக்கங்கள் கிழிக்கப்பட்டுள்ளன. கிழித்ததற்கான அடையாளமாக ஓரங்குலம் அகலமான கடதாசி மீதி உள்ளது என அவர் கூறினார்.

பிரெட்ரிகா ஜேன்ஸின் சட்டத்தரணி என்.எம்.சஹீட், சிரச செய்தி வாசிப்பாளர் ஓமாயா மடவெல விதானகே , புலனாய்வு பொலிஸ் பிரிவைச் சேர்ந்த டபிள்யூ.பி.எஸ்.ஐ.அபேயரட்ண, உயர் நீதிமன்ற பதிவாளர் ஆகியோரும் சாட்சியமளித்தனர். குறித்த வழக்கு இன்று வியாழக்கிழமையும் தொடரவுள்ளது. (ந-5)

# புங்குடுதீவில் வாகன...

நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும் இருவர் காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணத்திலிருந்து பொருட்கள் மற்றும் மரக்கறிகள் கொள்முதல் செய்து கொண்டு சிறிய ரக எல்ப் வாகனத்தில் நயினாதீவுக்கு செல்வதற்காக குறிகாட்டுவான் நோக்கிச் சென்றுள்ளனர்.

இதன்போது புங்குடுதீவு மகா வித்தியாலயத்திற்கு அண்மையாக வைத்து மற்றொரு வாகனத்திற்கு வழிவிட்டுக் கொடுப்பதற்கு முற்பட்ட போது சிறிய ரக எல்ப் வாகனம் சரிந்து விபத்துக்குள்ளானது.

இதன்போது வாகனத்தின் பின் பகுதியில் இருந்து பயணித்த பாலசிங்கம் ஜெகதீபன் வாகனத்தின் கீழ் நசியுண்டு உயிரிழந்தார்.

அத்துடன் பின்பகுதியில் இருந்து பயணித்த ஏனைய இருவர் காயமடைந்ததுடன் வாகனத்திற்குள் சாரதியுடன் இருந்து பயணித்த குருநாதர் தில்லையம்பலம் கை துண்டாடப்பட்ட நிலையில் படுகாயமடைந்தார்.

இதில் படுகாயமடைந்த மூவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-5)

# அறுபது வயதுக்குப் பின் சேவை நீடிப்பு இல்லை

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கான வயது எல்லை 60 வருடங்கள் என்ற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் 60 வயதின் பின்னர் சேவை நீடிப்பு வழங்கப்பட மாட்டாது எனவும் பொதுவிவகார உள்ளூராட்சி அமைச்சர் ஜோன் செனவிரட்ன நேற்று தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்கள் முன்னர் 55 வயதில் ஓய்வு பெறவேண்டும் எனவும் அதன்பின் 2-3 வருடங்களுக்கு சேவை நீடிப்பு பெறுவதற்கு வருடாந்தம் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் இருந்தது.

இனிமேல் அரச ஊழியர்கள் 57 வயது வரை கடமையாற்றுவதற்கு தகுதியானவர்களாவர். அதன்பின் 60 வயது வரை சேவை நீடிப்பு பெறுவதற்கு வருடாந்தம் விண்ணப்பிக்கலாம். 60 வயதிற்கு அப்பால் சேவை நீடிப்பு வழங்கப்படமாட்டாது என அமைச்சர் ஜோன்ஸ் செனவிரத்ன தெரிவித்தார்.

எனினும் இக்கொள்கை உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதவான்கள் ஆகியோருக்குப் பொருந்தாது. அவர்களுக்கான சேவைக் கால வயதெல்லை முறையே 65,63,61 ஆகும். (ந-5)

# பேரழிவு ஏற்படும் அபாயம்...

அசாதாரண காலநிலை எந்தவித மாற்றமுமின்றி இருப்பதால் வெள்ள அபாயத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் தவிப்பதாக பொது அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இந்த அசாதாரண காலநிலையால் மட்டக்களப்பு, அம்பாறை, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, நுவரெலியா, கேகாலை, கண்டி, பதுளை, இரத்தினபுரி, பொலநறுவை, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்கள் பெரும் பாதிப்படைந்துள்ளன.

இதன் காரணமாக 18 பேர் இதுவரை பலியானதுடன் 49 பேர் வரையில் காயமடைந்துள்ளனர்.

இரண்டுபேர் இதுவரையில் காணாமல் போயுள்ளனர். இதேவேளை ஆயிரத்து 727 வீடுகள் முற்றாகவும் 12 ஆயிரத்து 151 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

இதற்கிடையில் வெள்ளப் பெருக்கினால் பாதிப்படைந்துள்ள பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதில் சிக்கல்கள் காணப் படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் காமினி கெட்டியாராட்சி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தொடர்ந்து பெய்து வருகின்ற மழை காரணமாக நாட்டின் பல பிரதேசங்களில் மண் சரிவு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக கட்டிடப் பரிசோதனைகள் திணைக்களத்தின் மண்சரிவு ஆராய்ச்சிப் பிரிவின் தலைவர் ஆர்.எம்.எஸ். பண்டார தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மத்திய மலைநாட்டின் பல பிரதேசங்களில் இந்த அபாயம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போதும் மலையகப் பிரதேசங்கள் பலவற்றில் நிலத்துக்கு அடியிலான நீர் மட்டம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனால் திடீர்மண் சரிவுகள் ஏற்படலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக மலைப்பாங்கான பிரதேசங்களில் உள்ள மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை தொடர்ந்து பெய்து வருகின்ற மழை காரணமாக பல விவசாய நிலங்களும் பாதிப்படைந்துள்ளன. இதற்கிடையில் கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிப்படைந்த மக்களுக்காக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சினால் 55 மில்லியன் பெறுமதியான நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பொருட்கள் எதிர்வரும் ஒரு வார காலத்திற்குப் போதுமானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் தொடர்ச்சியான மழை வீழ்ச்சியின் காரணமாக உள்நாட்டு பொருளாதாரத்தில் மூவாயிரத்து 500 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்து அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (ந-5)

# சந்தேகத்திற்கிடமாக நடமாடிய நால்வர் பொதுமக்களால் மடக்கிப் பிடிப்பு

## சங்கானையில் சம்பவம்

சங்கானை முருகமூர்த்தி பிள்ளையார் கோயிலுக்கு அண்மையாக நேற்று மாலை சந்தேகத்திடமாக நடமாடிய நான்கு இளைஞர்களை பொது மக்கள் மடக்கிப் பிடித்து நையப்புடைத்து மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த நான்கு இளைஞர்களும் வீதியில் செல்லும் பெண்களுடன் சேஷ்டை உள்ளிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது சங்கானை முருகமூர்த்தி பிள்ளையார் கோயிலுக்கு அண்மையாக சந்தேகத்திற்கு இடமான முறையில் நான்கு இளைஞர்கள் பொது மக்களால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டனர்.

இவ் இளைஞர்களில் இருவர் சரளமாக சிங்கள மொழியில் பேசியதாகவும் நால்வரும் வீதியில் பயணிக்கும் பெண்களுடன் சேஷ்டை மற்றும் பல்வேறு குற்றச் செயல்களில் தொடர்புடையவர்கள் எனத் தெரிவித்து மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் குறித்த நான்கு இளைஞர்களையும் தடுத்து வைத்து விசாரணை செய்துவருகின்றனர். மேலதிக தகவல்களைப் பெறுவதற்கு மானிப்பாய் பொலிஸாரிடம் தொடர்பு கொண்ட போது தகவல் வழங்க மறுத்துவிட்டனர். (ந-5)

# பொத்துவில் கடலில் 10 மீனவரை காணவில்லை

பொத்துவில் கடல் பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற 10 பேரை காணவில்லை என புகாரிடப்பட்டுள்ளது.

இவர்கள் நேற்றுமுன்தினம் மீன்பிடிக்ச் சென்ற வேளையிலேயே காணாமல் போயுள்ளதாக உறவினர்கள் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமிடம் தெரிவித்துள்ளனர்.

காணாமல்போயுள்ள 10 மீனவர்களையும் தேடி கண்டுபிடிக்க உதவுமாறு மீன்பிடி அமைச்சர் ராஜித சேனாரட்ன மற்றும் தென் மாகாணத்திற்குப் பொறுப்பான கடற்படைத் தளபதியிடமும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ந-5)

# த.தே.கூட்ட...

கூட்டமைப்புக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற பேச்சுவார்த்தை குறித்து நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் அவர் கூறினார். (ந-5)

# மட்டக்களப்பு...

நிலையம் அறிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் நேற்று புதன்கிழமை காலை 8.30 மணிவரை 113.9 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

நேற்று புதன்கிழமை 12 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் 151.6 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது. மாவட்டத்தின் வருடாந்த மழை வீழ்ச்சி 1600 மில்லி மீற்றராகும்.

காலநிலையில் எந்தவிதமான முன்னேற்றமும் இன்றி தொடர்ச்சியாக மழை பெய்து வருவதுடன் மேலும் சில நாட்களுக்கு இதே காலநிலை நிலவும் எனவும் வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. (ந-5)

# கிணற்றில் ஆணின்...

லிருந்து மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுமார் 35 முதல் 40 வயது மதிக்கத்தக்கவரான மேற்படி சடலம் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் கோப்பாய் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உரும்பிராய்ப் பகுதியில் அண்மைக் காலமாக இளைஞர்கள் மற்றும் இளம் குடும்பஸ்தர்கள் காணாமல் போயிருந்தார்கள்.

அவர்களில் எவரினேதும் சடலமாக இது இருக்கலாமா என சந்தேகிக்கப்படுகிறது. முகம் மோசமாக உருக்குலைக்கப்பட்ட நிலையிலேயே சடலம் வீசப்பட்டிருக்கின்றது. அதேநேரம் சடலம் நீண்ட நாட்களாக கிணற்றில் காணப்பட்டதனாலும் உருக்குலைந்து காணப்படுகின்றது.

அண்மையில் காணாமல் போனவர்களின் குடும்பத்தவர்கள் சடலத்தினை அடையாளம் காட்ட முற்பட்ட போதிலும் அது சாத்தியப்பட்டிருக்கவில்லை. நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ந-5,6)


புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் - 2011

**பாடசாலைக்குரிய வெளியீடு**

ஆசிரியர் **திரு. வே. அன்பழகன்** அவர்களின்

**தரம் - 5 மாதிரிப்பரீட்சை வினாத்தாள்கள் வெளிவருகின்றன.**

- 16.01.2011 ஞாயிற்றுக்கிழமை பாடசாலைக்குரிய முதலாவது பரீட்சை வினாத்தாள் வெளி வருகின்றது.
- தரம் - 4 மாணவர்களின் அடைவுமட்டத்தை உயர்த்தும் மாதிரிப் பரீட்சை - 2011 வெளிவரு கின்றது.
- பாடசாலைகளின் நன்மை கருதி விசேடமாகத் தயாரிக்கப்பட்ட இந்த வினாத்தாள்களைப் பெற்றுப் பயனடையவும்.

நேரடித் தொடர்புகளுக்கு,

அன்பொளி கல்வியகம்
இந்துக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C-2144)

அன்பொளி கல்வி நிலையம்
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.



A/L 2012 பிரிவினர் பின்வரும் நேர அட்டவணைப்படி ஞாயிறுமுதல் வகுப்பிற்கு சமூகமளிக்கவும்

| பாடம் | நேரம் |
|---|---|
| பொருளியல் | 11 - 12 |
| வணிகக் கல்வி | 12 - 01 |
| கணக்கீடு | 01 - 03 |

DMI


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.